4296

# சுந்த சாதகம்

## தமிழ்ப் பத்திரிகை வெளியீடு.

உண்மைச் சைவமே காலந்தோறும் இயற்கை நிலைகுன்றிப் பல்வேறு வகையாக வழங்குவது என உள்ளங்கை நெல்லிக் கனிபோல யாவரும் எளிதின் உணருமாறு விளக்கிக் காட்டுவான் வேண்டி மிகச் சமீப காலத்தில் தமிழ்ப் பத்திரிகை ஒன்று வெளிப்படுத்த நிச்சயித்திருக்கின்றோம். இப் பத்திரிகையைப் படிப்பவர்கள் உண்மைச் சைவக் கொள்கைகளாகிய அரிய பெரிய வேத ரகசியங்களை நன்குணர்ந்து உண்மை கடைப்பிடித்து மதபேதம் முதலியவற்றை அறவே ஒழித்து, உலக விவகாரங்கள் வேறு கடவுளை அடைதல் என்னும் விவகாரம் வேறு என்று கூறுகின்ற போலி வேதாந்த சித்தாந்த நூற்கொள்கைகளாகிய அறியாமை மலிந்த கொள்கைகளை வேரறக்களைந்து சுக வாழ்க்கையில் ஈடுபட்டு தெளிவடைவார்கள். ஆதலால் இத்தகைய அரிய பெரிய உண்மைகளை எல்லாம் மேல் வெளியிடப்படும் பத்திரிகை வாயிலாக அறிந்து உய்தியடைய விரும்புவோர் புதுவை நந்தி வெளியீட்டு மன்றம் (நந்தி பப்ளிஷிங் ஹௌஸ்) சொந்தக்காரராகிய:— ரா. நாகரத்தினம்பிள்ளை அவர்கள் விலாசத்துக்கு தங்கள் தங்கள் முழு விலாசத்தை தெரிவிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

சிவமயம்.

விருத்தாசலத்துப் பெரியநாயகியம்மையார் திருவருளாணையால்

சைவப் பெரியாராகிய

# குமாரதேவவள்ளலார்

அருளிச்செய்த

# சுத்தசாதகம்.

இது,

கொழும்பு அரசினர் ஆசிரிய கல்லூரியிலும்,

வித்தியாநிலயத்திலும் தமிழ்ப்பண்டிதராயிருந்தவரும்

சுன்னாகம் வித்துவசிரோமணி

**அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள்**

மாணவருள் ஒருவருமாகிய

யாழ்ப்பாணம் தென்கோவை

**ச. கந்தையபிள்ளையவர்கள்**

எழுதிய

# உண்மை முத்திநிலை

என்னும் விஷயத்தோடு

புதுவை நந்தி வெளியீட்டு மன்றத்தவரால்

அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு 10,000 பிரதிகள்.

கலியுகம் ௫௦௩௦, விபவ ஞு ஆனி ௴

# அறிவித்தல்.

இப் புத்தகம் வேண்டுபவர்கள் கீழே காணப்படும் விலாசத்திற்கு எழுதி இரண்டணா தபால் முத்திரையும் அனுப்பிப் பெற்றுக்கொள்வார்களாக.

நந்தி பப்ளிஷிங் ஹௌஸ் Nandi Publishing House
4, அம்பலத்தாடையர் வீதி 4, Ambalatadier Street
புதுச்சேரி. Pondicherry

உ

சிவமயம்.

# முக்கியமான அறிவித்தல்.

சுத்தசாதகத்தோடு எம்மால் வெளியிடப்பட்ட "உண்மை முத்திநிலை" யென்னும் கட்டுரையில், சந்தானகுரவர் தூலத்தோடு மறைந்து உண்மை முத்தியடைந்த தத்துவப் பெரியாரல்லர் எனக் கூறப்பட்டிருத்தலைக் கண்ணுற்ற திருவாவடுதுறை ஆதீன சைவப்பிரசாரகரும், தேவகோட்டைச் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்துச் சித்தாந்த சாத்திர போதகருமாகிய தூத்துக்குடி ஸ்ரீமாந். பொ. முத்தையபிள்ளையவர்கள், "உண்மை முத்திநிலை ஆராய்ச்சி" என்னும் பெயரோடு கட்டுரை ஒன்று எழுதி வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். ஷெ பிள்ளையவர்கள் சுத்த சாதக முதலிய பொருளாகிய உலகு கண்டிடத் தூலத்தோடு மறைதல் என்னும் உண்மை முத்திநிலை சைவர்கள் அனைவராலும் கொள்ளத் தக்கதே என்றுகூறி அதனைப் பாராட்டிவிட்டார்கள். ஆயினும் சந்தானகுரவர் முதலியோரும் நிலத்துட் புதைக்கப்பட்டும் மேலே கூறிய உண்மை முத்தியையே அடைந்தவராவர் எனவும் கூறி அக்கூற்றை உறுதிப்படுத்துவதற்கு அறுபத்து மூவரையே சேக்கிழார் பெரிய புராணப்படி சான்று காட்டிவிட்டார்கள். இவர்கள் கூற்று ஆதாரமற்றது எனவும் சந்தான குரவர் சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளரே யன்றிச் சமய குரவர் முதலியோர்போல உண்மை முத்தியடைந்தவரல்லர் எனவும் சுருதி யுக்திப் பிரமாணங்களால் தக்கவாறு மறுத்து, யாழ்ப்பாணம் தென்கோவை ஸ்ரீமாந். ச. கந்தையபிள்ளையவர்கள் "உண்மை முத்திநிலை

ஆராய்ச்சி மறுப்பு" என்னும் பெயரோடு விரிவாக விளக்கி எழுதி கட்டுரையை எமக்கு அனுப்பிவிட்டார்கள். சேக்கிழார், சந்தானகுரவ முதலியோரைப் பற்றிய சங்கைகளாலும் அறுபான்மும்மை நாயன்ம ருட் சிலர் அடைந்த முத்தியைப் பற்றிய சங்கைகளாலும் சுத்தசாத முதலிய உண்மை முத்தி நிலைக்குப் பங்கம் வரமாட்டாது என்பது வெ ச. கந்தையபிள்ளையவர்கள் மறுப்புரையால் நன்கு புலப்படுகின்றது ஸ்ரீமாந். பொ. முத்தையபிள்ளையவர்கள் எழுதிய வியாசத்துள்ள குறை களை நிறைவாக்கி உண்மையை நன்குவிளக்கி நிறுவுதலால், இம் மறுப் புரை சைவர்கள் அனைவராலும் ஆவசியமாகப் படித்துணர வேண்டியதொ யாகும். இப்புத்தகம் வேண்டுவோர் எட்டு அணா தபால் முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்வாராக.

இங்ஙனம்

நந்தி வெளியீட்டு மன்றத்தார்

நெ. 4, அம்பலத்தாடையர் வீதி

புதுவை.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சுத்தசாதகம்.

## பாயிரம்.

### ஆழத்துப்பிள்ளையார் துதி.

சூதான மாயையோரைத்துதிக்கையாலெடுத்துமேலாம்
ஆதாரமானவந்தவருளினிலிருக்கவைக்கும்
தாதாவாய்விருத்தவெற்பிற்றங்கியேபிரகாசிக்கும்
பாதாளத்தானைபாதம்பணிந்துபோற்றிடுதல்செய்வாம். 1

### விருத்தாசலேஸ்வரர் துதி.

வேறு.

அருமறையுச்சிதனில்விளங்குவதாயனாதியாயமலன்மற்றமலை, இரு
வர்க்குநிகழ்ச்சியாயந்தவிறைவற்கிதயமாயிலிங்கரூபமதாய், ஒருகிரிவடி
வாய்க்கொடுமுடியனந்தமுடையதாயுலகெங்குநிறைவாய்த், திருமுது
கிரியென்றொருபெயர்படைத்ததேவைநாடொறுமிறைஞ்சிடுவாம். 2

### பெரியநாயகியார் துதி.

மரகதவடிவுமதித்திருமுகமுமலர்க்குழலுங்குறுநகையும், காகமலமுங்கூர்
விழியுஞ்செவ்வாயுங்கச்சணிதனமுநூலிடையும், அரகரவென்போர்க்
களித்திடும்பதத்தோடஞ்சலென்றென்னெதிர்தோன்றி, உரகதியளித்
தபெரியநாயகியையுளத்தினிலிருத்திவாழ்த்திடுவாம். 3

பங்கயன்றிருமாற்கரியதோர்பரமன்பங்கியேபெரியநாயகியே, சங்
களிலதாய்த்தடைகண்மற்றிலதாய்த்தத்துவமசிக்கருத்தமதை, அங்
யினெல்லியெனவிளக்குவதாயமலையேயுனக்கிதயமதாம், துங்கநன்செ
றியொன்றுளத்தினும்விளக்கித்தொண்டனேன்வாக்கினுமுரைப்பாய்.

## நூல் வரலாறு.

உலகிலெச்சமயங்களுமுரைத்திடுதற்கொருவிரோதங்களுமின்றி, இ
குமச்சமயங்களுக்குமேலாகியிலங்கிடுமுபநிடநெறியை, அலகிலெ
மண்ணலருளியவகையுன்னகத்திலும்விளக்கிவாக்கினிலும், குலவி
வுரைப்பேமென்றனன்விருத்தக்குன்றில்வாழ்பெரியநாயகியே.

பெரியநாயகிதன்கருணையாலிங்குப்பிராரத்தமும்மொழிந்தோர்க்குத்
திரிவதாமாயாவடிவதுகரைந்துதிருவருளேவடிவாக, அரியவாஞ்சாம
தசியுரைப்படியேயமைத்திந்தச்சுத்தசாதகத்தைத், தெரிவிலாவெ
யென்வாக்கினினின்றுதிருவுளம்பற்றியதிதுவே.

பாயிரம் முற்றிற்று.

---

## நூல்.

ஈசனதுரையுங்கிரியையதென்றுமியம்பிடுமுபாசனையென்றும்
பாசமதகன்றசுத்தமதென்றும்பகர்ந்திடுமூன்றுகாண்டமதாம்
நேசநற்கிரியைசைவம்வைதீகநிகழ்ந்திடுமுபாசனைசுத்தம்
ஆசில்சிவாத்துவிதமிவைமூன்றுமடங்கிடுந்தத்துவமசியே.

கிரியையினெறியையிலங்கிடவியம்புங்கிளர்தந்திரம்மெழுநான்கும்
அரியநல்லுபாசனநெறியதனையறைந்திடுமறையொருநான்கும்
உரியவச்சுத்தநெறிதனையுரைக்குமுபநிடச்சுருதியெண்ணான்கும்
கிரியைதொம்பதந்தற்பதமுபாசனையக்கேடில்சுத்தம்மசிபதமே.



இருக்குமுன்னான்கின்முடிவிலெண்ணான்காயிலகிடுமுபநிடமவையே
வருக்கமுமிரண்டாம்பூருவமென்றும்வயங்கிடுமுத்தரமென்றும்
சுருக்கமதின்றியத்தியான்மீகஞ்சொற்றிடும்பூருவபாகந்
திருக்குகளின்றியங்கலிங்கயிக்கஞ்செப்பிடுமுத்தரபாகம். 3

முத்தியாமிடத்தும்முதலென்றேமொழியுமாகமமுமங்கொன்றும்
அத்தியான்மீகமறையுபநிடமுமவணியில்வழக்கமேயன்றிப்
பத்தியாலடையுமங்கலிங்சயிக்கம்பகர்ந்திடுமுபநிடமின்றும்
அத்தினலிவையிலடக்கமதென்பாரைதவிளக்கிடுந்தொந்தத்தசியே. 4

சைவநன்னெறியுந்தந்திரமவையுந்தற்பான்முகத்தினின்றுதிக்கும்
தய்யவைதீகமும்மறையவையுஞ்சுவாசமற்றதனினின்றுதிக்கும்
உய்யுமச்சிவாத்துவிதநெறியதவுமுபநிடமும்முளத்துதிக்கும்
ஐயமுந்திரிவுமறவிவைக்கருத்தமறைந்திடுந்தத்துவமசியே. 5

ஆகமமிருபத்தெட்டினின்முடிவாம்ஆகமம்வாதுளமதனில்
ஏகமென்றியம்புமறையனுசரித்தேயியம்பிடுநான்மறையவையில்
பாகமதுறஞ்சாமத்தின்முன்னெறியும்பகர்சிவாத்துவிதவந்நெறியும்
யூகமதிலங்கவியம்பிடுமதனலுண்மைசாமத்தினின்முடிவே. 6

பந்தமதகன்றசுத்தமாயிருத்தல்பரமமாமுத்தியதென்றும்
அந்தநல்லதிட்டானம்மதுதானேயாகுதன்முத்தியதென்றும்
நந்தலில்சிவத்துக்கங்கமாயிருத்தனன்குறுமுத்தியதென்றும்
தந்திரமறையுபநிடதமிம்மூன்றுஞ்சாற்றுந்தாற்பரியநீசேட்பாய். 7

பந்தமதுறுமான்மாவையேநோக்கிப்பந்தநீங்குதன்முத்தியென்றும்
அந்தநற்சுத்தான்மாவையேநோக்கியவ்வதிட்டானநீயென்றும்
நந்தலில்பரமானவனையேநோக்கிநற்சிவத்தங்கநீயென்றுந்
தந்திரமாதிமூன்றுகாண்டமதுஞ்சாற்றிடுமிவைதொந்தத்தசியே. 8

முன்பதசிருட்டிப்பதிபசுபாசமூன்றையுமனாதியாய்நிறுவும்
பின்பதசிருட்டிச்சகமித்தையந்தப்பிரமமேயுளதெனநிறுவும்
சின்பதமானவசிபதசிருட்டிச்சிவசத்திலீலையாய்நிறுவும்
மன்பதமூன்றும்பின்னையபின்னையுமாசறுசிவமுமென்றுணர்வாய். 9

முன்பதமானதொம்பதப்பசுவேமூடிருணீங்கிச்சுத்தமதாய்ப்
பின்பதமானதற்பதவருளிற்பிறங்குந்தாதான்மியமடைந்தே
சின்பதமானவசிபதசிவத்தைச்சேர்ந்ததற்கங்கமாய்நின்றால்
மன்பரமுத்திமுடிந்ததுவாகுமற்றவைதனினிற்கிற்குறையே. 10

கங்கையுமிடைச்சேரியுமொன்றுக்கொன்றுகைவிட்டததுவிட்டதொக்
கும், இங்ஙனங்குந்தமுமொருவனுமற்றிடைவிடாததுவிடாதொக்கும்
எங்ஙனமவனுமிவனுமற்றிடைவிட்டிடைவிடாதிருத்தலுங்கூடும், துங்க
வவ்வசிக்குப்போந்திடுமெருத்தந்தோன்றிடாமறைநெறியோர்க்கே. 11

சீவனதுபாதியீசனதுபாதிதீர்ந்துசித்திரண்டதுமொன்றே, ஆவதுவிட்
டுவிடாதலக்கணையென்றறைந்திடிலுபாதியோரிரண்டும், மேவலைநீங்
கல்விட்டலக்கணையாம்விளங்குஞ்சித்திரண்டதுமொன்றே, ஆவதுவிடா
தலக்கணையாகுமவைக்குமேலிலக்கணையின்றாம். 12

விட்டலக்கணையும்விடாதலக்கணையும்விட்டுவிடாதலக்கணையும், திட்ட
மதுறவேதேர்ந்திடிற்பந்தந்தீர்ந்திடல்விட்டலக்கணையாம், இட்டநல்ல
நுட்டானம்மதுதானாயிருத்தலேவிடாதலக்கணையாம், எட்டறுசிவத்துக்
கங்கமாயிருத்தல்விட்டுவிடாதலக்கணையே. 13

தத்துவமசியென்றுரைக்குமுப்பதத்திற்றகுவன்னநான்கதாமவையும்
ஒத்துறுதொந்தற்பதமவைதன்னிலொன்றொன்றமசியினிலிரண்டாம்
தொத்துதலகன்றுசுத்தமாயிருத்தறொல்லநுட்டானந்தானுதல்
ஒத்துறுமவையிலொன்றொன்றேயசியிலோரிரண்டங்கமுஞ்சிவமே. 14



சுத்தமாய்நின்றாலிச்சைசுத்தியதாந்தொல்லநுட்டானமாய்நின்றால்
சித்தமாஞானஞ்சுத்தியதாகுஞ்சிவத்தினுக்கங்கமாய்நின்றால், மத்தமாங்
கிரியைசுத்தியதாகும்வகுத்தவிம்மூன்றுமற்றொழுங்கில், சித்தமாய்ச்
சுத்தியிலாவிடின்மீட்டுந்தேகமொன்றெடுக்குமென்றுணர்வாய். 15

தொம்பதம்விளங்கின்மேல்வினைமறைத்ததொல்லிருளகன்றுபோயொ
ளிக்கும், தம்பதமானதற்பதம்விளங்கிற்சஞ்சிதமாயைபோயொளிக்கும்,
அம்பதமானவசிபதம்விளங்கிலரும்பிராரத்தம்போயொளிக்கும்
செம்பரவருளேவடிவதாயான்மாசிவத்தினுக்கங்கமாய்த்திகழும். 16

அடுத்தமற்றிரண்டுசனனத்தில்வீட்டையடைந்திடுந்தொம்பதநெறியோர்,
அடுத்தமற்றொருநற்சனனத்தில்வீட்டையடைந்திடுந்தற்பதநெறியோர்,
அடுத்தவிச்சனனந்தனிலடைந்திடும்வீடசிபதநெறியுளோரிவரும்,
அடுத்தவிவ்வுடலோடடைந்திடாவிடின்மேலாக்கையொன்றெடுக்கு
மென்றுணர்வாய். 17

ஒடுங்கிடுங்காலந்தோன்றினவடைவினொடுங்கிடுமென்றுரைப்பதனால்
ஒடுங்கிடுங்காலஞ்சத்தியவாதிக்கொடுங்குமிவ்வுடறன்மாத்திரையின்
ஒடுங்கிடுங்காலஞ்சத்தியவாதிக்கொடுங்குமிவ்வுடலசத்தியமாய்
ஒடுங்கிடுங்காலமுடலிங்கேவீழ்ந்தாலொடுங்கினதில்லையென்றுணர்வாய்.

மேலொருவடிவையெடுத்ததேயாகின்மேவுமிவ்வுடலிங்கேவீழும்
மேலொருவடிவையெடுத்ததின்றாகின்மேவுமிவ்வுடலிங்கேவீழா
மேலொருசிவத்தைச்சீவன்சென்றடையுமேவுமிவ்வுடலிங்குத்தானே
மேலொருசிவத்தின்வடிவதாமருளாய்வெளியதாயுலகுகண்டிடவே. 19

சூக்குமமதனினின்றுமுன்வினையிற்றூலதேகமுமுளதாகும்
சூக்குமந்தனதுகாரணமடையிற்றூலமுஞ்சூக்குமத்தடையும்
சூக்குமந்தனதுகாரணமடையத்தூலமிங்ககன்றதேயென்றால், சூக்குமந்
தனதுகாரணம்விடுத்துத்தூலமொன்றெடுத்ததென்றுணர்வாய். /32

தூலவிவ்வுடலைவிடுத்துநில்லாதுசூக்குமஞ்சூக்குமம்விடுத்துத்
தூலநில்லாதிதிரண்டையும்விடுத்துத்தொல்லுயிர்நிலாவுயிர்விடுத்துத்,
தூலசூக்குமங்கணின்றிடாதுயிருஞ்சூக்குமமும்முடிவடைந்தால்,
தூலமுமுடிவையடைந்திடாதிந்தத்தொல்லுலகினில்விழுந்திடுமோ. 21

வினையினிலெடுத்தவிவ்வுடன்மேலும்வினையுளதெனிலிங்கேயகனும்
வினையிலதெனிலிங்கிவ்வுடறானேவினையறுமோமயமாகி, வினையுள
வுடல்போற்றோற்றன்மாத்திரமாய்விளங்கியேவெந்துறுபுரிபோல்
வினையிலாப்பரமமுத்தியில்வெளியாய்விமலநல்லருளதாய்விடுமே. 22

சீவசிற்றறிவுமிம்முத்தவறிவாய்த்திகழ்ந்திடினுடன்மருள்வடிவந்
தாவருமோங்காரவவ்வடிவாகுந்தக்கசிவன்முத்தவறிவும்
மேவரும்பரமுத்தவறிவாகில்விளங்குமோங்காரவவ்வடிவும்
ஓவிலந்தவருள்வடிவாகுமொழுங்கிதேயென்றுணர்ந்திடுவாய். 23

பிராரத்தமுடன்பாடென்றெந்தநெறியும்பேசிடுமிந்நெறியதற்குப்
பிராரத்தமுடையோரருகரேயன்றும்பிராரத்தம்புசித்திடுவோர்கட்
கறுதிந்தமாயாதனுகரணங்களதனினாற்சிவத்துவமதனை, உறுதுமற்ற
வரைச்சீவன்முத்தர்களென்றுரைத்திடப்படுவதெப்படியோ. 24

அன்னைதன்முலைப்பாலருந்திடும்பருவமகன்றப்பாற்பருவம்வந்ததற்பின்
அன்னைதன்முலைப்பாலருந்தவேண்டிடினுமம்முலைவற்றியேயிடும்போல்
பின்னையின்போகம்புசித்திடும்பருவம்பெயர்ந்தப்பாற்பருவம்வந்ததற்பின்
பின்னையின்போகம்புசிக்கவேண்டிடினும்பிராரத்தநீங்கியேயிடுமால். 25

இந்நல்லொழுங்கின்முன்னிருபதமுமெய்தியிவ்வசிபதத்தடைந்தால்
பந்தமில்சிவத்தைவடிவொடுமடையும்பகுத்தவையொன்றிலொன்றொடு
ங்கிச், சந்ததந்தருக்கியசிபதத்தருத்தந்தனைத்தத்தம்பதத்தினிலொடுக்கும்
அந்தர்தமக்குமற்றொருக்காலுமசிபதமுத்திகிடையா. 26



முத்தியிற்சிவமுமுயிரிரண்டாகின்முத்திசாயுச்சியமின்றாம்
முத்தியிற்சிவமுமுயிருமொன்றாகின்முத்தியேபெற்றவனின்றாம்
முத்தியிற்சிவத்துக்குயிரங்கமாகின்மொழியுமற்றவையுண்டாமதனான்
முத்தியிற்சிவமுமுயிருஞ்சையோகமொழியுந்தாதான்மியங்குறையே. 27

சச்சிதானந்ததற்பரசிவமேதனதுதன்னிலையிலேநிற்க
அச்சிதானந்தலீலையினாலேயநேகமாய்ச்சராசரமாகிச்
சச்சிதானந்தமேயுடல்பொறிகடகுகரணங்களாய்க்கொண்டே
அச்சிதானந்தலீலையினடித்துமடைந்திடும்பண்டையபடியே. 28

ஏகமாயசையாத்தற்பரலிங்கமிலீலையிற்சரமனேகமதாய்
மோகமாமிருளாயவ்விருளதனின்மூடமாய்ச்சிறிதுநாளிருந்துஞ்
சோகமாமிந்தமருளதாயதனிற்றுவக்குண்டுசிறிதுநாணடித்தும்
பாகமாமோவாயதிற்சின்னாணடித்தும்பண்டுபோனின்றிடுமன்றே. 29

சலமதுதானேதிரண்டுப்பதாகிச்சலம்வந்துட்புகவந்தச்சலமாய்
நிலமதின்விளங்குமஃதினைப்போலநிமலமாமருவருடானே
குலவுலீலையினாற்றிரண்டுருவாகிக்கூறின்றிக்கூறதாய்நடித்தும்
இலகன்மாத்திரமாய்நடித்துமுன்போலுமிருந்திடும்பண்டையபடியே.

சரமந்தவிருளிலிருந்திடுங்காலத்தனுமுதனான்குமவ்விருளாம்
சரமந்தமருளினடித்திடுங்காலத்தனுமுதனான்குமம்மருளாம்
சரமந்தவோவினடித்திடுங்காலத்தனுமுதனான்குமவ்வோவாம்
சரமந்தவருளினின்றிடுங்காலத்தனுமுதனான்குமவ்வருளாம். 30

இருள்வடிவதுவுமருள்வடிவதனிலெய்தியேமறைந்திடுமிந்த
மருள்வடிவதுவுமோவடிவதனின்மறைந்திடுமோவடிவதுவும்
அருள்வடிவதனின்மறைந்திடுமந்தவருள்வடிவதுவுமச்சிவத்தில்
தெருள்வடிவானசத்தியாய்முன்போற்றிகழுமென்றசியுரைத்திடுமே. 31

அருளுறுவடிவேமுன்னியல்பான்மாவாணவவிருளுறுமன்றே
இருளுறுசுழுத்திவிழுங்கிடுமதனுக்கிந்தமாயையின்சிருட்டியதாம்
மருளுறுகனவுவிழுங்கிடுமதற்குவந்ததுபிராணவசிருட்டி
தெருளுறுமந்தப்பிராணவம்விழுங்கத்திகழுமவ்வருட்சிருட்டியதே. 33

மருள்வடிவதனினீங்குதலின்றிமற்றுமொன்றறிவிலாக்குழந்தை
வெருவருங்குமாரந்தருணமூப்பென்றேவிளங்குதல்போலவான்மாவும்
அருள்வடிவதனினீங்குதலின்றியாணவமாயையோவருளாய்ப்
பருவமற்றவையிலந்தந்தவடிவாய்ப்பண்டுபோன்முடிவினின்றிடுமே. 34

இருளினிற்பகுப்பின்றியசடமயமாமிம்மருளுதயமதாகின்
உருவதாம்பஞ்சபூதமேமயமாமோவொளியுதயமதாகின்
உருவருபஞ்சாக்கரமதேமயமாமோங்கருளுதயமதாகின்
அருவதாம்பஞ்சசத்தியேமயமாமாருயிர்வடிவமென்றுணர்வாய். 35

வடிவதிவ்விருளதாய்நிற்குங்காலைமன்னுயிர்பசுவதாய்நிற்கும்
வடிவதிம்மாயையாய்நிற்குங்காலைமன்னுயிர்சீவனாய்நிற்கும்
வடிவதிவ்வோவதாய்நிற்குங்காலைமன்னுயிர்சீவன்முத்தனுமாம்
வடிவதிவ்வருளதாய்நிற்குங்காலைமன்னுயிர்பரமமுத்தனுமாம். 36

இருளுறுபசுவதாய்நிற்குங்காலையிருளதுவாகியேநிகழும்
மருளுறுசீவனாய்நிற்குங்காலைமருளதுவாகியேநிகழும்
தெருளுறுமோவின்முத்தனாங்காலைத்தெருள்பிராணவமதாய்நிகழும்
அருளுறுபரமமுத்தனாங்காலையருள்தாய்நிகழுமவ்வருளே. 37

இருளதுவாகிநிகழ்ந்திடுங்காலையிரும்பதியாகியேநிகழும்
மருளதுவாகிநிகழ்ந்திடுங்காலைமகபரமாகியேநிகழும்
தெருள்பிராணவமாய்நிகழ்ந்திடுங்காலைச்சிவலிங்கமாகியேநிகழும்
அருளதுவாகிநிகழ்ந்திடுங்காலையச்சிவமாகுமச்சிவமே. 38



அரியவவ்வருளேமூன்றியல்பதுவுமைந்துநற்குறியுமாய்நிகழும்
இரியுதலில்லாச்சத்தையாய்ச்சித்தாயின்பமாய்நிற்குதலியல்பாம்
கிரியையுஞானமுமிச்சையதுவுங்கிளர்திரோதையும்பரையதுவும்
உரியதுகுறியாம்விரியிலையைந்தாயொடுங்கிடிலொன்றதாய்நிற்கும். 39

பிராணவமதுவுமூன்றியல்பதுவும்பிறங்குமைங்குறியுமாய்நிகழும்
திரமுறுவவ்வுமிவ்வுமவ்வதுமாய்த்திருந்தவேநிற்குதலியல்பாம்
உரமுறுநவ்வுமவ்வுமச்சிய்யுமோங்கியவவ்வும்யவ்வதுவும்
விரவுறுகுறியாம்விரியிலையைந்தாய்மேவிடிலொன்றதாய்நிற்கும். 40

மருளுறுமாயையதுவுமூன்றியல்பும்வகுக்குமைங்குறியுமாய்நிகழும்
உருவுறுதமசுராசசுசத்துவமாயொன்றியேநிற்குதலியல்பாம்
பிருதிவியுஞ்சலமுமனலதுவும்பெருகியவாயுவும்வானும்
வருகுறியாகும்விரியிலையைந்தாய்வந்தொடுங்கிடிலொன்றாய்நிற்கும். 41

ஐந்துநற்குறியுமூன்றியல்பதுவுமாகியவருளதேயருவாம்
ஐந்துநற்குறியுமூன்றியல்பதுவுமாகியவோவருவுருவாம்
ஐந்துநற்குறியுமூன்றியல்பதுமாகியமாயையேயுருவாம்
ஐந்துநற்குறியுமூன்றியல்பதுவுமாகியவிவையிலூனுளவாம். 42

உருவமாமுணவேயெதிரதாமுபயமுளத்தினிலுருசிமாத்திரமாம்
அருவமாமுணவேதிருத்திமாத்திரமாயறிவினில்விளங்கிடுமந்த
உருவமாமுணவேசிவருக்குரித்தாமுபயமிம்முத்தருக்குரித்தாம்
அருவமாமுணவேயம்முத்தருக்குரித்தாமெனவுரைத்திடுமசியே. 43

உருவமாமுணவாலுருவமாமுபயவுணவினாலுபயமேமயமாம்
அருவமாமுணவாலருவமேமயமாமச்சிவாங்கிசன்வடிவதுவே
உருவமாமுணவாற்சீவனாமுபயவுணவினாற்சீவன்முத்தனுமாம்
அருவமாமுணவாற்பரமமுத்தனுமாமச்சிவாங்கிசனுயிரதுவே. 4

அன்னியதசையையருந்துதன்மனிதர்க்கடாதுமற்றதையருந்திடுவோர்
அன்னியவிருகாதிகளெனவறையலாகுமற்றதிற்சிவாங்கிசரும்
அன்னியமாயாவுணவருந்திடுதலடாதுமற்றதையருந்திடுவோர்
அன்னியமாயாசகிதசீவர்களென்றறைந்திடலாகுமென்றுணர்வாய். 45

அசுத்தவிவ்வுணவைபுசித்திடுமளவுமசுத்தவாதனையதுநீங்கி
அசுத்தவத்தையினைவிழுங்கிடுஞ்சுத்தவவத்தைவந்தடைதலேயிலையாம்
அசுத்தவிவ்வுணவைச்சுத்தமதாகவகத்தினிற்பாவனைசெய்தால்
அசுத்தவிந்நினைவைநீங்கியந்நினைவையகத்தினிற்பொருந்தியேநிற்கும்

திரிவிததணத்திற்றாமதமோகந்திகழுமிராசதமிராகம்
உரியசத்துவமேஞானமதாகுமுலகிலிம்முக்குணவுணவே
விரியுமற்றவையிலெவைபுசித்ததுவோவிளங்கிடுமக்குணமல்லால்
அரியசுத்தவத்தையடைவதேயிலையவ்வவத்தைவந்துறும்வகைகேட்பாய்

அன்னைதன்வயிற்றிற்புசித்தவக்குணமாயாக்கையும்பொறியுமம்மனமும்
மன்னியும்பினுமப்புசிப்புமேன்மிகவும்வாஞ்சையுற்றருந்தியேயுழலும்
உன்னலும்பொறியுமுடலுமிம்மூன்றுமொத்திடுமெனத்தெளிந்துணர்ந்
து, தன்னதுள்ளவையிலுறருசிதிருத்திதனில்வயிராகமேயாகும். 48

உலகினில்விடயவிச்சையையுடையோனுணவதற்கேற்கவேகூட்டி
இலகிடப்புசித்தான்முயற்சிமேன்மேலுமேறியேவளர்ந்திடுமதுபோல்
குலவிடும்வீட்டிலிச்சையேயுடையோன்கொண்டதற்கேற்கவேயுணவே
இலகிடப்புசித்தான்முயற்சிமேன்மேலுமேறியேவளர்ந்திடுமன்றே. 49

தமகுணப்புசிப்பேமயக்கத்தையளிக்குந்தருமிராசதகுணப்புசிப்பே
மமதையையளிக்குஞ்சத்துவப்புசிப்பேமயக்கமுமமதையுமகற்றி
அமலநல்லுணர்வேயளித்திடுமதனாலவையிரண்டினுநசையகற்றி
நிமலசத்துவமேவருத்தனையாகநின்றுசத்துவப்புசிப்பருந்தும். 50



அடிசின்முன்னுரைக்குமறுசுவையவையையருந்திடுகாலையினேக்கிக்
கடினமுமுறைப்புமிராசதமவையிற்கழிந்திடும்புராதனமூசன்
மடிவுறுதமசென்றிருமையுமகற்றிமாலைகாலைப்பொழுதகற்றிக்
கடினவுச்சியிற்சத்துவகுணப்புசிப்பேகைக்கொண்டுதினமருந்திடுமால்.

இடம்பொருளேவன்மூன்றையுமுடையோர்க்கித்தகையுணவுறுமந்த
இடம்பொருளேவன்மூன்றையுமகன்றோர்க்கித்தகைவுணவுறாததனால்
திடம்பெறவூரினுச்சியிலேகித்திருவருள்புசிப்பித்ததென்றே
விடம்பெறினுங்கைப்பெற்றதையருந்தில்விமலமாய்நின்றிடுஞ்சித்தம்.

தந்திரகிரியைநெறிதனிலீசன்றந்திடப்புசிக்கும்பின்மறைசொல்
அந்தநல்லுபாசனைநெறியதனிலனைத்துநாமெனக்கண்டுபுசிக்கும்
இந்தவவ்வுணவின்மாறுபாடின்றியிருமையுமுடிந்ததேயாயின்
தொந்தமில்சிவமேசடுமுகமாகித்தொக்கிருந்தருந்தன்மேனினைவாம்.

இருவகைநெறியும்வரவுபோக்குடைத்தாயியங்கிடுமிதுவன்றிமாயை
ஒருமுதலென்றுமித்தையதென்றுமுரைத்திடுநிட்டையும்விகற்ப
நிருவிகற்பமுமாய்நிகழ்ந்திடுஞ்சகசநிட்டையெக்காலையுமின்றென்
றொருவிமற்றவையைச்சகசநிட்டையையுலகெங்குந்தேடியேயிடுமால்.

முன்புறுநிட்டைசவிகற்பமாகிமுத்தியின்மூன்றுநின்றிலகும்
பின்புறுநிட்டைநிருவிகற்பமதாய்ப்பிரமமற்றொன்றுநின்றிலகும்
வன்புறந்நிட்டையிருமையுமுறினும்வரவுபோக்குடையதாய்நிகழும்
இன்புறுநிட்டைசகசமதாகியிலங்கிநின்றிடுநின்றபடியே. 55

சவிகற்பநிருவிகற்பநிட்டையதுஞ்சத்துவகுணத்தில்வந்ததுவாம்
இவிகற்பநீங்கிவருடமாயிரமங்கிருந்திடினும்பினும்விழிக்கும்
செவிதினிலடையுஞ்சகசநிட்டையதேதிருவருடன்னில்வந்ததுவாம்
தவிருதல்கூடலின்றியேயங்குத்தங்கிநின்றிடுநின்றபடியே. 56

சகசநன்னிட்டையியல்புதம்முயற்சிசற்றென்றுமின்றியேயருளால்
சகமதும்போகமதுவுந்தம்முடலுந்தகுகாரணமுமவையவையாய்
அகமதிலுதித்ததுமறையாமலகன்றதுபின்னுதியாமல்
அகமுரைகாயவருத்தமேயின்றியமர்ந்துநின்றிடுநின்றபடியே. 5

அருளண்டமாகிலுயிர்பிண்டமாகுமண்டமுந்தோற்றன்மாத்திரமாய்
அருள்நின்றதாகிற்பிண்டமுமதுபோலாகியேநின்றிடுமண்டம்
அருள்வடிவாகிற்பிண்டமுமுயிராயருளிற்றாதான்மியமடையும்
அருளந்தச்சிவத்துக்கங்கமதாகியமர்ந்துநின்றிடுநின்றபடியே. 58

இருளினிலிருந்தும்பருவம்வந்ததற்பினியற்றிடுமுயற்சியொன்றின்றி
மருளினிலடைந்துமருள்வடிவாகிவயங்கிடுஞ்சகசமேபோல
மருளினிலிருந்தும்பருவம்வந்ததற்பின்வருந்திடுமுயற்சியொன்றின்றி
அருளினிலடைந்திங்கருள்வடிவாகியமர்ந்துநின்றிடுநின்றபடியே. 59

மருள்வடிவதற்குமஃதைநானென்றேமன்னுஞ்சீவனுக்குமாதாவாய்
மருள்வடிவமுதம்புசித்திடுமதுவேவயங்கிடுமற்றதையொருவி
அருள்வடிவமுதமூறிடவருந்தியஃதுமிச்சீவனுங்கரைந்தே
அருள்வடிவதுஞ்சிவாங்கிசனும்மாயமர்ந்துநின்றிடுநின்றபடியே. 60

சாக்கிரமதனினிற்குந்தத்துவத்திற்சாற்றுங்கேவலத்தினிற்சிறிது
நீக்கிமற்றதற்குநிற்குந்தத்துவத்தைநிறுத்துதல்போலநின்மலமாம்
சாக்கிரமதனினீக்குதலின்றித்தத்துவமனைத்துஞ்சுத்தத்தில்
ஆக்கியேநிறுத்துந்திருவருளதனாலடைந்துநின்றிடுநின்றபடியே. 61

மருள்வடிவாகியிருந்திடுமிடமுமருளதாய்ப்புசிப்பதுமருளாய்
அருளிதின்மறைந்துநிற்குமென்பதுவுமன்றியேநின்றமுன்போல
அருள்வடிவாகியிருந்திடுமிடமுமருளதாய்ப்புசிப்பதுமருளாய்
மருளிதின்மறைந்துநிற்குமென்பதுவுமாற்றிநின்றிடுநின்றபடியே. 62



சகசநிட்டையதுலபித்திடுங்காலைதம்முயற்சியதொன்றுமின்றிச்
சகசமாகித்தன்னுளமதனிற்றானின்றிங்கிடைவிடாதூறும்
சுகவருளமுதமதனையேயருந்தித்தொல்வடிவதுமெள்ளக்கரைந்து,
சுகவருள்வடிவாய்ச்சுட்டெலாமருளாய்த்தோன்றிநின்றிடுநின்றபடியே.

அருளொளியிச்சையதுதனிலுதிக்கிலசைவறநின்றிடுஞ்சித்தம்
அருளொளிஞானமதுதனிலுதிக்கிலகிலமவ்வருளதாய்த்தோன்றும்
அருளொளிகிரியையதுதனிலுதிக்கிலகத்தினின்றருளமுதூறும்
அருளொளியமுதமருந்தியவ்வடிவாயமர்ந்துநின்றிடுநின்றபடியே. 64

இருளுறுமவத்தையடைந்தெங்குமிருளாயிருந்துபின்விழித்திடல்போ
லும், அருளுறுமவத்தையடைந்தெங்குமருளாயமர்ந்துபின்விழித்திடு
மென்னில், இருளுறுமவத்தைதமசினாலடைந்தேயிராசதத்தாற்பினும்
விழிக்கும், அருளுறுமவத்தைசத்துவத்தடைந்தேயந்தாசதத்திற்பின்
விழிக்கும். 65

மாயையிலடைந்தபின்பிருளவத்தைவந்தடையாதுபின்படைதன்
மாயையின்றமசாலாதலாற்போக்கும்வரவுமாய்நிகழ்ந்திடுமதன்மேல்
ஆயவவ்வருளையடைந்தபின்மாயையடைவதேயிலைபினுமடைந்தால்
ஆயவவ்வருளையடைந்ததேயின்றுமடைந்ததுமாயைசத்துவத்தால். 66

இருளினிலடைந்துதானுமவ்விருளாயிருந்தங்குநின்றதாயினும்
அருளினிலடைந்துதானுமவ்வருளாயமர்ந்தங்குநின்றதாயினும்
மருளினிலடைந்தவடிவநில்லாதுவடிவதிங்கிருத்தலேதென்னில்
இருளருளவத்தைதனிற்குணபோதமிலங்கியங்கிருத்தலினன்றே. 67

சத்துவகுணமேவருத்தனையாகித்தங்கியேயுளத்தினுணின்றால்
ஒத்துறுநிட்டைகூடிடுமிலதேலொருவியிச்சகலகேவலத்தைத்
தொத்துறுமன்றிக்குணமுமாயையினிற்றோன்றினதாதலாலிந்த
ஒத்துறுநிட்டையுண்மையேயன்றுமுபாசகநிட்டையென்றுணர்வாய். 68

ஆதலிற்சகலகேவலசுத்தமடைந்திடலிங்குமாயையதாம்
வாதனையொழிந்துங்குணமிருத்தலினிவ்வடிவகன்றிடிற்பினுஞ்சுத்த
சாதமுற்றிடுதலன்றியேவீட்டைத்தானடைந்திடுதலேயின்றும்
ஏதமிலருளிலுண்மைநிட்டையினையெய்தினோர்சீவன்முத்தர்களே. 69

சீவனிம்மாயைதனின்முத்தனருளிற்சீவன்முத்தன்னடுவோவின்
மேவலிற்சீவன்றனக்கந்தவருளுமெய்ம்முத்தன்றனக்குமாயையுமில்
சீவன்முத்தனுக்கேரியின்கரைமீதிற்றிகழ்ந்திடுவோனைப்போற்றோன்
றும், ஆவதுநாகங்கண்கரிதுதிக்கையறிதல்போற்காகங்கண்மணிபோல்.

அந்தாவடிவசீவன்முத்தர்களிவ்வடிசிலைப்புசித்ததேயின்றும்
இந்தவிவ்வுலகிதுபுசித்திடுகென்றிந்நெறியோர்கணின்றிறைஞ்சித்
தந்திடிலுணவுமனாவின்றிப்புசிக்குஞ்சமித்ததுமலமதுமாகா
மந்திரமதனைவடிவதாக்கொண்டமகிமையிலென்றுணர்ந்திடுவாய். 71

எங்கெங்குநோக்கின்மருண்மயமாகியிருந்திடும்பந்தமாந்திசையில்
தங்குந்தன்வடிவமருண்மயமாகிதயங்கியேநின்றதுகுறிபோல்
எங்கெங்குநோக்கிலருண்மயமாகியிருந்திடுமுத்தியாந்திசையில்
தங்குந்தன்வடிவமருண்மயமாகித்தயங்கியேநிற்குதல்குறியே. 72

அருள்வடிவதுவேபார்வையிற்றோக்கிலகப்படாதென்றுநின்றிலகும்
மருள்வடிவதுவேபார்வையிற்றோக்கில்வந்தகப்பட்டுநின்றிலகும்
அருண்மருணடுவாமோவடிவதுவேயகப்படும்பார்வையொன்றுக்கே
மருள்வடிவுலகுமோவடிவோர்க்குவாய்த்திடும்பார்வையொன்றுக்கே.

பழுதையிற்கிளிஞ்சில்கட்டையினின்றும்பாம்பும்வெள்ளியுங்கள்வனும்
போல், எழுதருமாரோபிதமதிட்டானமிலங்கிடிலிலாததுபோலும்
முழுதுணர்சிவம்வந்துதித்தவிச்சீவன்முத்தருக்குலகமின்றுதித்தல்
கழுதிரதம்போற்காட்சிமாத்திரமாய்க்கவும்விவகாரமேயின்றும். 74



கனவதுபோல்விவகாரமுண்டென்னிற்கனவதுநீங்கியேவிழித்தால்
கனவிதென்றுணருமாங்கவர்தமக்கக்கனவுவந்துதவுதலுண்டோ
கனவுமுன்கண்டநினைவுமாத்திரமாய்க்காணுறுமகத்ததுபோலக்
கனவிந்தவுலகுஞ்சீவன்முத்தருக்குக்காணன்மாத்திரமதாய்நிகழும். 75

சொற்பனமதனிற்கனவிதென்றிடுமோர்சொற்பனசாக்கிரநடுவே
நிற்பனபோலுமருண்மருணடுவேநின்றிடும்பிரணவவடிவம்
சிற்பரசீவன்முத்தனவ்வடிவாய்ச்செகமிதுஞ்சிவமதுந்தோன்ற
நிற்பனதனக்குநிழலின்றிநிழல்போனிலத்தடியின்றியேநிகழும். 76

வெந்துறுபடமும்வறுத்திடும்வித்தும்விளங்கிடுங்கானலிற்சலமும்
இந்திரதனுவுங்கனவிருந்தகன்றவிடமதுமிங்குமுன்னிருந்த
முந்துறுகடமுங்கடமதையெடுத்துமுடிந்தபின்றிகிரியிற்சுற்றும்
கந்துருநகரும்போன்முத்தர்வடிவுங்காட்சிமாத்திரமதாய்நிகழும். 77

மண்ணினிற்றடுக்கச்சலத்தினினனைக்கவருங்கனலிற்சுடவளியால்
நண்ணிநின்றசைக்கவெளியிடம்விடவேநணுகிடாதென்றுநின்றிலகும்
புண்ணியசீவன்முத்தர்தம்வடிவம்பொற்புறவ்வடிவுகண்டளவே, விண்
ணின்மண்ணினிற்பாதலத்தினினுள்ளோர்வியப்பொடுமெழுந்திறைஞ்
சிடுவார். 78

மூன்றுநற்சுடரினினையொப்பவராய்மூன்றுகாலமுமுணர்ந்தவராய்
மூன்றுலகத்துமுவமையில்லவராய்மூன்றுலகும்மறிந்தவராய்
மூன்றுநற்காண்டமுந்தெரிந்தவராய்மூன்றுசிற்பதமுமுற்றவராய்
மூன்றுமுன்மலமுமொருங்கறுப்பவராய்மூன்றுதாபமுமகன்றவராய்.

அகவிருண்மாயைகருமமும்மூன்றுமகற்றியேசுத்தங்கமாக்கித்
தகநிறுத்திடுதல்கையதாமப்பாற்றன்னுயிராகியேநிகழும்
சுகசிவவுதயமாக்குதறீயாஞ்சொற்றிடுதீக்கையினருத்தம்
செகமிதிலவையிற்பாவனைகடந்துசெய்தங்குநிறுத்தவல்லவராய். 80

பிரணவவமுதேபுசித்தனுதினமும்பிரணவமயமதேயாகி
மரணமதுறுமிம்மனிதரைப்போலவடிவமாத்திரமதேதோன்றிப்
புரணநல்லொளிக்குமாயைக்குநடுவேபுகுந்திருந்திலங்குநற்குருவைச்
சரணெனவடைத்திங்கவனருளாலேதரிக்கப்பெற்றங்கத்திலிங்கம். 81

தேகமும்பொறியுங்கரணமுமுயிருந்திரிவுறுமாயையின்மயத்தை
யகநின்றகற்றித்தீக்கையிலராசானிவைக்கதிட்டானமந்திரமே
ஆகநின்றமைத்தவகைகுருவருளாலறிந்ததிற்பாவனைதிடமாய்
ஊகமதுடனேமுன்னினைவகற்றியுளத்தினிற்சகசமேபிறந்து. 82

இக்குலந்தனக்கிச்சமயமதென்றிங்கியம்புதலிலையதனாலே
இக்குலந்தனைவிட்டெச்சமயத்துமெய்துதனியாயமதாகும்
இக்குவலயத்திலெச்சமயத்துமிலங்கிடுஞானமுண்டதனால்
இக்குவலயத்திலெச்சமயத்துமியற்கையைவிட்டிடலாகா. 83

அன்னியசத்தங்கவருதலகற்றியன்னியரசனையுமகற்றி
அன்னியரூபநோக்குதலகற்றியன்னியபரிசமுமகற்றி
அன்னியசத்தங்கேட்குதலகற்றியன்னியநினைவதுமகற்றி
அன்னியருடனேயிணங்குதலகற்றியன்னியருறைவிடமகற்றி. 84

அன்னியர்கையில்வாங்குதலகற்றியன்னியர்க்கீகுதலகற்றி
அன்னியகடவுள்வணங்குதலகற்றியன்னியகிரியையுமகற்றி
அன்னியநூலையோதுதலகற்றியன்னியகேள்வியுமகற்றி
அன்னியபாகமருந்துதலகற்றியன்னியவகையறத்துடங்கி. 85

சமயநற்கிரியையனைத்தையும்விடினுந்தனக்கந்தப்பிரணவவமுதம்
அமையநின்றறியதனையேயருந்தியவ்வடிவாயிடுமளவும்
சமயிகள்பாகமதனையேகொண்டுதற்பரநிவேத்தியம்புரியும், அமைதியை
விட்டான்மேற்கொளாதென்பதறிந்ததைநியமமாய்க்கொள்ளும். 86



புரிசடையோனுக்கற்பித்துக்கொளினும்பொருந்தியபொருளதேவேண்
டும், திரிவின்றியொன்றாய்ப்பாவித்துக்கொளினுஞ்செல்லல்போலொ
ழுங்கதேவேண்டும், அரியநல்லறத்தைவேண்டிடிற்பொருளுமறமதா
யீட்டவேண்டிடும்போல், உரியதற்சமயத்தொழுங்கினிற்புசித்தாலுளத் 87
தழுக்கின்றியேவதியும்.

ஞானசங்கமத்துக்கிந்நெறியதனினவிற்றிடுஞ்சாதியுஞ்சமயத்
தீனமிலாசாரமும்விசாரித்தலியற்கையேயன்றெவரேனும்
ஊனமிலங்கந்தனிலிங்கமொன்றேயுளபிரமாணமாய்க்கொண்டங்
கானநற்பயிக்கமவர்மனைதோறுமங்கையேற்றருந்திடலாமால். 88

சடத்தலமதினுமிலிங்கமேயாகித்தானெனல்விடுத்தருந்தியபின்
கொடுத்தவன்றானுங்கொடுத்திடுபொருளுங்கொள்ளுவோன்றானுமொ
ன்றாக,அடுத்தவிம்மாயாவடிவதைநோக்கியகற்றியவ்வோமயமாக
விடுத்தனுதினமும்புசித்திடிலனைத்தும்விமலவோமயமதாய்விடுமே. 89

இன்னதன்மையவாஞ்சுத்தபாவனையிலிரும்பிராத்தம்போயொளித்துத்,
தன்னதுணின்றிங்கிடைவிடாதுறுந்தக்கதோர்பிரணவவமுதம்
அன்னதையருந்திமுன்வடிவதுவுமங்ஙனமோமயமாகி
இந்நிலமதனிற்றோற்றன்மாத்திரமாபியங்குதல்சீவன்முத்தியதே. 90

அறிவிலாக்குழந்தைப்பருவத்தின்முலைப்பாலருந்திடுங்குமாரங்காளையி
னில், அறிவிலாக்குழந்தையருந்துதல்கண்டுமதினைசசகசமாயிலதின்
அறிவிலாச்சீவத்துவப்பருவத்தினருந்திடுமாயையினுணவை
அறிவிலாச்சீவாருந்துதல்கண்டுமதினைசசகசகமாயின்றாம். 91

அனமதும்பாலுஞ்சருக்கரைகண்டுமங்கனிவகைகளுந்தேனும்
இனமவையொன்றாய்க்கூட்டியருசியினிதயநின்றிடைவிடாதுறும்
கனபிரணவவமுதத்தையேயருந்திக்களிப்பவர்மீட்டுமிச்சகத்தின்
பிணமுறுவிடயவின்பையெண்ணிடுமோபிராரத்தமும்பிலைபவர்க்கே. 92

உபயகல்லமுதேபுசித்தனுதினமுமுபயமேவடிவதுவாகி
அபயமென்றரைக்குமுயிர்களுக்கிரங்கியஞ்சலென்றவர்களை நோக்கி
உபயவர்நெறியின்பயனைமுன்னுணர்த்தியுபநிடச்சுருதிநின்றரைக்கும்
அபயமற்றொன்றமிலாதவிந்நெறியேயனுக்கிரகம்புரிந்திடுமால். 98

இந்நிலைசின்னாட்சீவர்கணிமித்தமிருந்தனுக்கிரகமேபுரிந்தும்
தந்நிலையதனினின்றருளமுதந்தான்புசித்தருண்மயமாகி
அந்நிலைபரமமுத்தியிற்சிவத்துச்சங்கமாய்நிசமுமுன்போலென்
றிந்நிலைசாமத்தசிபதமுரைக்குமிதுசிவாத்துவிதமென்றுணர்வாய். 9

என்றெனையாண்டவிருத்தவம்பிகையேயிதயத்தும்விளக்கிவாக்குள்ளும்
நின்றுரைத்திந்நெறிசொலுமருத்தமிணைக்கும்வாய்த்திடுமென்றவாழ்த்
திச், சென்றெனதுடலுங்கரணமுஞ்செகமுஞ்சேர்ந்திடும்போகமுந்தா
னாய், நின்றனள்கண்டேனிதற்குக்கைம்மாறென்னிருமலைவாழிநீடூழி.

சுத்தசாதகம் முற்றிற்று.

ஆக பாயிரம் உட்பட க0க.



உ

கணபதி துணை.

# உண்மை முத்திநிலை.

“ நன் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தேன் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே. ”

அம்மையப்பராகிய எம்பெருமான் திருவடிக்கமலங்களை மனமொழிமெய்களால் வணங்கி, எம்பெருமக்களாகிய சமய குரவர் முதலிய தத்துவப் பெரியார் அநுக்கிரகத்தாலும், சந்தான குரவர் முதலிய வித்துவப் பெரியார் அநுக்கிரகத்தாலும், சிற்றறிவினனாகிய அடியேன் உண்மை முத்திநிலை என்னும் இச் சிறிய கட்டுரையை ஒருவாறு எழுதி வெளியிடத் துணிந்தனன், இதனைக் குறைகூறுவார் உளராயின், அக் குறை, அடியேனுக்கு உரிமையாகாது, இக் குரவர்களுக்கே உரிமையாகும். ஆதலால், இப்பொழுதை வித்துவப் பெரியாரும் அடியேனை மன்னித்து அநுக்கிரகம்புரிவார் என்பது திண்ணம்.

சின்னாண்முன்னர், ஆப்த நண்பர் ஒருவர் குமார தேவர் அருளிச்செய்த சுத்தசாதகப் பிரதி ஒன்றை அனுப்பிவைத்தனர். இதனைப் பன்முறை படித்து ஆராய்ந்தபோது, இந்நூல், சமய சாத்திரங்களாக வழங்கும் மற்றைய நூல்களில் ஒரு சிறிதும் காணப்படாத வேத ரகசியங்கள் மலிந்த உண்மைச் சைவநூலாதல் தெற்றெனப் புலப்பட்டது. இதனால் கழிபேருவகையும், இறும்பூதும் அடைந்த அடியேன்

"தூலத்தோடு மறைதலே உண்மை முத்தி எனக் கூறும் இந்நூலைப் படிப்பவர்கள் மணிவாசகர், அறுபத்துமூவர் முதலிய சைவப் பெரியார் அடைந்த முத்திநிலையை நன்குணர்ந்துகொள்வார்கள்" என்பது முதலாக ஒரு சில கூறிச் சில பத்திரிகைகளில் வெளியிட்டனன். அதனைக் கண்ணுற்ற சிலர், தூலத்தோடு மறைதல் அசம்பாவிதமும் அசாத்தியமுமாம் எனவும், தூலம் பழுதடைய அதனைப் பிணமாக விடுத்துச் சூக்குமத்தோடு உயிர்பிரிந்து அடையும் முத்தியே வேதாகம சாத்திர சம்மதமான முத்தி எனவும், ஆதலால் சுத்தசாதகம் என்னும் நவீன நூல் ஒன்றுமாத்திரம் கூறுவது அங்கீகாரமாகாது எனவும், ஆலயங்களில் சடிதியில் இறந்தோர் எல்லாம் மணிவாசகர், நந்தனார் முதலியோர்போல முத்தியடைந்தவராவர் எனவும், அவ்வாறு இறந்தவர்களுக்கும் ஆலயங்களில் பிரதிட்டையும், வழிபாடும், விழவும் நடைபெறுகின்றன எனவும், வேறு சிலர், உடம்பு பொய்யாதலின் அது பிணமாக அழிந்துபோக, உயிர் சூக்குமத்தோடு பிரிந்து அடையும் முத்தியே பரமுத்தியாகிய உண்மை முத்தி எனவும், பிறந்தன எல்லாம் இறந்தேவிடும் எனவும், தூலத்தோடு மறைதல் ஒருவகைச் சித்தியும் பதமுத்தியும், கற்பிதநிலையுமாம் எனவும், இவற்றைச் "சூக்கும புத்தியால்" அறியவேண்டும் எனவும், பிற சிலவும் கூறிச் சில பத்திரிகைகளில் வெளியிட்டனர்.

உலகத்திலே கல்வி, செல்வம், அதிகாரம் என்பன காரணமாக உந்நதநிலையில் வாழ்ந்த புண்ணியமுடையோரையும் ஏற்ற ஏற்றவகையால் கௌரவப்படுத்திப் போற்றவேண்டியது நமது முக்கிய கடனே. ஆயினும், இவர்பொருட்டாக மணிவாசகர், அறுபான்மும்மை நாயன்மார் முதலிய தத்துவப் பெரியார் அடைந்த முத்தியை மறுக்கத் துணிதல் இயற்கை விரோதமும் பாதகமுமேயாகும். சமயாசாரியர்முதலிய சீவன்முத்தர்கள் உலகினர்போல் வாழ்ந்து பல அருட்புதுமைகளால் சைவத்தை நாட்டிப் பலருங் கண்டு போற்றும்படி தூலத்தோடு மறைந்து மீண்டுவாராத உண்மை முத்தியை அடைந்தார்கள் என்பது ஒருவரும் மறுக்கமுடியாத உண்மையாகும். உண்மை முத்தியை விளக்கிச் சைவத்தை நாட்டவந்த நூல்களுள்ளே சுத்தசாதகம் ஒன்றே தத்துவப் பெரியார் அடைந்த உண்மை முத்தியை வெளிப்படையாக விளக்கிக் கூறிற்று. மற்றைய சாத்திரங்கள் உண்மை முத்தியின் இயல்பை விளக்கிக் கூறாமையால், அவற்றையே முடிவான நூல்கள் என நம்பிய உலகினர் தத்துவப் பெரியாராகிய சீவன்முத்தர் இயல்பையும், அவர் அடைந்த உண்மை முத்தியின் இயல்பையும் அறியாது மயங்குவாராயினர். சுத்தசாதகத்தை ஒருவரும் மறுக்கமாட்டார் என்பதும், மறுப்பார் உளராயின், அவர் உண்மைச் சைவராகார் என்பதும் நிச்சயமாகும். இந்நூல் அரசராயிருந்து பூர்வபுண்ணிய மிகுதியால் உண்மைத் துறவுபூண்டு, விருத்தாசலம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் உலகமாதாவாகிய பெரியநாயகியம்மையார் திருவருட்பிரசாதம் பெற்ற குமாரதேவவள்ளலார் அருளிச் செய்த பதினாறு சாத்திரங்களுள்ளே மிகச் சிறந்ததாகும். சீவர்கள் அடையவேண்டிய சுத்தநிலையாகிய உண்மை முத்திநிலையையும், அதற்குறிய பொதுவான சாதகயோகங்களையும் நன்கு விளக்கிக் கூறுதலால், இந்நூல் சுத்தசாதகம் என்னும் பெயர்த்தாயிற்று.



இவற்றைக் கூறுமுகத்தால், பிரபஞ்சம் விரிந்தவகையையும், பதிபசுபாச இலக்கணங்களையும், சீவர், சீவன்முத்தர், பரமுத்தர் இலக்கணங்களையும் அவரவர்க்குரிய தநுகரணபுவன போகங்களையும், இந்நூல் நன்கு விளக்கிக் கூறுகின்றது. உருவத்தால் சிறியதாயினும் பொருளால் அளவிடப்படாத உலவாக்கிழியாக இந்நூல் விளங்குவதை, இதனை ஆராயும் அறிஞர் நன்குணர்ந்து கொள்ளுவார்கள் என்பதில் ஐயமில்லை. பிராரத்த அநுபவம் மருளுடம்பினராகிய சீவர்களுக்கே உரியது என்பதனை உணராது, அவ்வநுபவத்தால் இறந்தோருள்

ளே, கல்வி, செல்வம், அதிகாரம், ஆடம்பரவேடம் என்பனகாரணமாக உந்நதநிலையில் வாழ்ந்தோர் யாவரையும், பிராரத்த அநுபவம் ஒழிந்து உடம்பு மாறப்பெற்ற தத்துவப் பெரியாராகிய சீவன்முத்தர்போல முத்தியடைந்தவராக மதித்துத் தாமும் அவ்வாறு இறந்தோர் நிலையையே அவாவி அவரை வழிபட்டுப் பிறவிவலைப்பட்டு உழலும் தன் பிள்ளைகள் மாட்டு இரங்கி, அவரை உய்வித்தற் பொருட்டே, உலகமாதாவாகிய பெரியநாயகியம்மை இந் நூலைக் குமாரதேவர் வாக்கில் நின்று சில காலத்துக்குமுன் அருளினாள் என அறிக. இவ்வுண்மை இந் நூல் வரலாற்றுச் செய்யுட்களால் அறியப்படும். இந் நூலையே முக்கிய ஆதாரமாகவும், திருவாசக முதலிய தத்துவப் பெரியார் திருவாக்குக்களையும் பிற சிலவற்றையும் இடையிடையே பிரமாணமாகவும் கொண்டு இக் கட்டுரை எழுதப்படுகின்றது.

தத்துவப் பெரியாரெல்லாம் தாம் அருளிய பாடல்களில் நரை திரை மூப்புப்பிணிகள் ஒழிந்து எம்பெருமான் திருவடியை அடைய வேண்டும் எனவும், அவை ஒழிந்து அடையப்பெற்றோம் எனவும் பல இடங்களில் கூறியருளினர். (திருவாசகம் — கண்டபத்து. 6.; அப்பர் தேவாரம் — திருச்சேறை திருக்குறுந்தொகை. 3.; திருமந்திரம் — சரீரசித்தியுபாயம். 4, 5, சேசரியோகம் — 3. 5. 7.). "நரைவருமென் றெண்ணி நல்லறிவாளர் குழவியிடத்தே துறந்தார்" (நாலடியார்) எனப் பிறரும் நரை திரை முதலியன ஒழியவேண்டும் என்றனர். பிராரத்த ஒழிவின்கண் தூலம் நரை திரை மூப்புப்பிணியால் பழுதடைந்து பூமியில் பிணமாய்விடப்பட, உயிர் பிரிந்து முத்தியடைவது உண்மையானால், இப் பெரியார் எல்லாம் நரை திரை மூப்பைப் பொருட்பண்ணி அவை நீக்கி எம்பெருமான் திருவடியை அடையவேண்டும் என்று முறையிடவேண்டியதில்லையே! தூலம் நரை திரை மூப்புப்பிணியால் பழுதடைந்து பிணமாகாமல், சுத்தசாதகம் கூறியபடி அத் தூலத்தோடே முத்தியடைதலே உண்மை முத்தியாகும். ஆதலாற்றான்



இப் பெரியார் எல்லாம் இப்படிக் கூறினார் என்பது நிச்சயமாகும். "பிறந்தன இறக்கும்" "இறந்தன பிறக்கும்" என உலகியல் நோக்கிக் கூறிய அவரே "மாற்றிப் பிறக்க வகையறிந்தாயில்லை" என உண்மை நிலையையும் கூறினார் அன்றோ! "இறந்தன பிறக்கும்" என்றமையால், தூலத்தைப் பிணமாகவிடுத்துச் சென்றவர் திரும்பப் பிறப்பார் என்பதும், அது முத்திநிலையன்று என்பதும் நன்கு புலப்படவில்லையா? (திருமந்திரம்—சரீரசித்தியுபாயம்-1,2.). இறந்து பிறந்து உழலும் ஆன்மாக்கள் ஒருகாலத்து முத்தியடையவும் வேண்டுமன்றோ! இறப்புக்கும் முத்திக்கும் பேதமில்லையா? இருவகை நிலைக்கும் தூலத்தைப் பிணமாகவிடுத்துச் செல்வதே இலக்கணமாகுமா? இவ்வாறாக உடம்பைவிட்டு உயிர் பிரிந்து முத்தியடையும் என்ற உணர்ச்சியே, உலகத்தவர் பலர் முத்தியின் இயல்பை அறியாது அதனை அலட்சியமாகக் கருதுவதற்குக் காரணமாயிற்று.

கல்வி, செல்வம், அதிகாரம் என்பனகாரணமாக உந்நதநிலையில் வாழ்ந்தோரையும், அவர் இறந்தபின் "அடைந்தார் — ஐக்கியமானார் — அதுவானார் — சிவமானார்" என்னும் உபசாரவார்த்தைகளால் உலக சம்பிரதாயம் நோக்கிக் கூறுதலும் ஒருகால் அவசியமேயாதலால், அவ்வாறு சில பல கூறி அவரைக் கௌரவப்படுத்துவதேயல்லாமல் உண்மையை மறுத்துரைத்தற்கு அறிஞர் உடன்படமாட்டார் என்பது திண்ணம். வித்துவப் பெரியார்களாகிய "வேதாந்த" குரவர்களும், "சித்தாந்த" சந்தான குரவர்களும் புண்ணிய சீலர்களே என்பதில் ஐயமில்லை. அவர்கள் ஏறக்குறைய எல்லாப்படிகளையுந் தாண்டியிருப்பார்கள். பெருஞ்சாத்துக்களாகிய அவர்கள் தூலம் கரைந்து அள்ளூறாக்கையாகிச் சூக்குமமாகவேண்டிய ஒரு படிதான் மிச்சமாய் இருக்கிறது. இதுபற்றியே சமய குரவர் முதலிய தத்துவப் பெரியார் அடைந்த முத்தியைச் சந்தான குரவர் முதலிய வித்துவப் பெரியார் அடையவில்லை என்று அறிஞர்கள் யாவரும் ஒரேமுகமாகக் கூறுகின்ற

ணர். அபிமானம் காரணமாக ஒரு சிலர் இதனை மறுத்துரைப்பது அங்கீகாரமாகாது. எத்துணைப் பெரிய மாயாசித்திகள் படைத்தவராயினும் "புற்றுமாய் மரமாய்ப் புனல்காலே உண்டியாய்" (செத்திலாப்பத்து-2) "துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை" யாராய் வற்றிப் பாம்புகள் போலவும், வௌவால்கள் போலவும் ஆயிரவருடக் கணக்காகக் கிடப்போரும் தூங்குவோருமாயினும், எம்பெருமான் அருளால் அருந்தல் பொருந்தல் அனந்தல்கள் அமையப்பெற்றுச் சகச நிட்டாபரராய் உலகர்போல் வாழ்ந்து தமது தூலம் அள்ளூறாக்கையாய்ச் சூக்குமமாய்க் கரையப்பெற்றால் ஒழிய, அவர் முத்தியடைவது முற்றாக அசாத்தியமேயாகும். உடம்பை வாட்டித் தவம்புரிவார் உண்மை காணமாட்டார் என்பதனை திருவாசகம் திருவண்டப்பகுதி அகவலினும்; "அஞ்சு மடக்கடக்கென்பர் அறிவிலார்" (ஐந்திந்திரிய மடக்கு முறைமை. 3) எனவும், "எளிய வாதுசெய்வார் எங்களீசனை" (சூக்கும பஞ்சாக்கரம்-1) எனவும் வரும் திருமந்திரச் செய்யுட்களினும் நோக்கி அறிக. புலால்துருத்தியாகிய இத் தூலவுடல், பூந்துருத்தியாய் அமலம்பெறுதல் எவ்வாறமையுமெனில், வண்ணான் அழுக்கேறிய உடைகளை அமலமாக்கற் பொருட்டு, முன்னிலையில் விளங்கும் காரமுள்ள அழுக்குக்களை நிறைகண்டு பஞ்சீகர்ணித்து, அழுக்கை யகற்றும் உபாயம்போல், குருவருளால், சரீரபௌதிக நிறையறிந்து, முன்னிலைப் பொருள்களில் இனங்கண்டு எடுத்துப் பஞ்சீகாணித்து நிறைகொண்டு அருந்தினால், அருந்தியது பொருந்தும்; பொருந்தினால் அழியுந் தன்மையுடைய இப் புலால் துருத்தியில், சாதலைத்தரும் நிறையாகிய மாயையெனும் பாசம் அணுவணுவாக நீறி, அனந்தல் அடையும். அதனால் இத்தூலவுடல் மாறுதலடைந்து பூந்துருத்தியாக அமையும் என அறிக. இவ்வுண்மையையே அப்பர்சுவாமிகளும், (பலவகை திருத்தாண்டகம் —1, 5; திருமாற்பேறு, திருக்குறுந்தொகை —3) திருமூலரும், (8-வது தந்திரம் பதிபசுபாச வேறின்மை —18.) தமது பாடல்கள் சிலவற்றில் குறிப்



பால் கூறியருளினர். "மாறு பாடில்லாத உண்டி மறுத்துண்ணின் ஊறுபாடில்லை உயிர்க்கு" எனத்திருவள்ளுவர் கூறியதும் அறிக. (குறள் - மருந்து. 5). சவிகற்ப நிர்விகற்ப நிட்டையுடையோரையும், வித்துவப் பெரியாரையும், வேடதாரிகளையுமே உலகத்தவர் பெரிய தவசிகள், யதிகள், முனீந்திரர்கள், சுவாமிகள் என்று மருளுகின்றனர். சகச நிட்டையுடைய அறுபத்துமூவர்போன்ற சீவன் முத்தர்களை உலகமாக்கள் அறிவது முற்றாக அசாத்தியமேயாகும். "சகச நிட்டைக்கும் என் சிந்தைக்கும் வெகு தூரம்" என்று தாயுமானவரே இந் நிட்டை கைவரப்பெறாது இரங்கினார் என்றால் உலகமாக்கள் இந் நிட்டையாளரை அறியமுடியாமை வியப்பன்றே! சகச நிட்டையுடையோர் தம்முயற்சியால் நிட்டை கூடுவதில்லை. அவர் "பார்த்தால் உலகத்தவர்போலிருந்து" எந்நேரத்தும் எத்தொழிலைச் செய்யினும் நிட்டையில் இருப்பவரே யாவர். இவரையே "அருளமுதம்" உண்பவர் எனவும், இவர் உடல் அருளாகக் கரையும் எனவும் சுத்தசாதகம் 63 ம் செய்யுள் கூறுகின்றது. நிட்டையின் இலக்கணத்தைச் சுத்தசாதகம் 53 ம் செய்யுள் தொடங்கி 63 ம் செய்யுள்முடிய நோக்கி அறிக. சகச நிட்டையாளராய் உண்மைச் சைவநிலை வாய்க்கப்பெற்றவர் எச்சாதியிலும் இருக்கலாம். வைஷ்ணவருள்ளும் சீவன் முத்திநிலை கைவரப்பெற்றுத் தூலத்தோடு முத்தியடைந்தோர் பலர் உளர் "எச்சமயத்தும் இயற்கையை விட்டிடலாகா" எனச் சுத்தசாதகம் 83 ம் செய்யுள் கூறியதும் அறிக. தமது தூலத்தைச் சிவசம்பந்தமாய் (அமலமாய்) மாற்றினவரே உண்மைச் சைவராவார்.

" கொல்லான்புலாலைமறுத்தானைக்கைகூப்பி எல்லாஉயிரும்தொழும் "

என்னும் திருவள்ளுவர் வாக்கும் இப் பொருட்டேயாகும் என்பது பலர்க்கும் வியப்பைத் தருவதாயினும், இதனை உற்று நோக்குவார்க்கு இதன் உண்மைப் பொருள் தெற்றெனப் புலப்படாததாகாது. மிருகம் பறவை முதலியவற்றைக் கொன்று அவற்றின் ஊனை உண்ணாமை

ஒன்று மாத்திரமுடைய உலகச் சைவனை யார் யார் தொழுகின்றனர் எல்லா உயிரும் தொழுகின்றனவா? பிறஉயிர்களால் இவனுக்குத் தீங்கு விளைதல் இல்லையா? உலகத்தவரை வெருட்டி மாமிசம் சாப்பிடாமற் பண்ணுதற்காக இப் பெரியார் இப்படிக் கூறினரா? இதனை அறிஞர் சிந்திப்பாராக. தமது தூலம் பிணிமூப்புக்களால் பழுதடைந்து பிணமாகாதவாறு சாதகயோகங்களால் அதனை மறுத்த (மாற்றிய) அப்பர் பெருமானைக் கொல்லுதற்கு வந்த யானையாகிய விலங்கும் வலஞ்செய்து வணங்கிப் போந்தமையும், அவர் திருமேனி நீற்றறை அனலாலும் நீராலும் கொல்லப்படாமையும், மற்றைய மெய்யடியாரும் சராசரப் பொருள்களால் யாதும் இடையூறடைந்து மாண்டுபோகாமையும் அறிக. சீவன் முத்தர் இயல்பைச் சுத்தசாதகம், 76 ம் செய்யுள் முதல் 80 ம் செய்யுள்வரை நோக்கி அறிக. வித்துவப் பெரியாராகிய பௌராணிகர், தத்துவப் பெரியார் முத்திநிலையையும் சாதக யோகங்களையும் விளக்கிக் கூறுமை குற்றமாகாது. தத்துவப் பெரியாராகிய உண்மைச் சைவராய திருவள்ளுவர் "எல்லா உயிரும் தொழும்" என்றார் என அறிக. பிற உயிர்களின் உடலை ஒருவன் கொன்று அருந்தாமைபோலவே, தன் உடலையும் கொல்லாது அதனைச் சாதகயோகங்களால் மாற்றி நித்தியத்துவம் அடையவேண்டும் என்னும் உண்மை நிலையையும் இவ்வதிகாரத்தாற் கூறிப்போந்தனர் நம் திருவள்ளுவர் என அறிக. இக்காலத்தில் இத்தகைய சீவன் முத்தரும் இல்லை; உண்மைச் சைவமும் இல்லை. மேல் இத்தகைய உண்மைநிலை யடைதற்கு முற்கூறிய வித்துவப் பெரியாரே அருகராக வேண்டியது முறையாகும். தூலம் அமலம் அடைதற்கு உணவு முக்கியமாதலால், இடம் பொருள் ஏவல் வாய்ந்து உந்நதநிலையில் வாழ்ந்த சந்தான குரவர் முதலியோர், சத்துவ குணம் பொருந்திய முன்னிலை ஆகாரங்களைத் தருவித்து இஷ்டம் போல் அருந்தியிருப்பார் என்பது பலரும் அறிந்த உண்மை. உணவு



நியமத்தைக் குறித்துச் சுத்தசாதகத்தில், 43 ம் செய்யுள் தொடங்கி 53 ம் செய்யுள்வரையும் 86 ம் செய்யுள் தொடங்கி 89 ம் செய்யுள்வரையும் நோக்கி அறிக. அக் குரவர்கள் தூலமாகிய சத்தும் பல சென்மங்களாக அமலம்பெற்று வந்திருக்கலாம். ஆதலால் மேல்வருஞ் சென்மத்தில் சற்குருநாதன் அருளால் அவர்களுக்கு முத்தி உளதாம் என்பது நிச்சயமாகலாம். பதமுத்திபெற்றார் எனவும் பலர் கூறப்படுகிறார். எத்தகைய பதங்களை அடைந்தவராயினும், அவர் பின்னும் பிறந்தே தூலம் பூரண அமலம் அடையப்பெற்றுச் சீவன்முத்தராய் அத் தூலத்தோடு மறைந்து முத்தியடையவேண்டியவராவர். முற்கூறிய வித்துவப் பெரியார் இத்தகைய பதங்களை அடைந்தவராகக் கொள்ளப்படலாம்.

ஆதலால் இக் குரவர்களையும், சேக்கிழார், பரஞ்சோதிமுனிவர், கடவுண்மாமுனிவர், ஆறுமுகநாவலர், குமாரசுவாமிப்புலவர் முதலிய பெரியாரையும் தமிழுலகம் பாராட்டிப் போற்றவேண்டியது முறையாகும். இவரெல்லாம் அடியேனிலும் பார்க்க எத்தனையோ மடங்குகூடிய மதிப்பொலிவும் அருமைபெருமையும் உடையாராதலால், இவர் யாவருக்கும் அடியேன் உரிமையான வணக்கமும் வாழ்த்தும் என்றும் உரிமையாகற்பாலனவேயாம்.

உலகத்திலே வேதம், ஆகமம், புராணம் முதலாகப் பெருஞ் சிறப்புவாய்ந்த பல நூல்கள் வழங்குகின்றன. அவையெல்லாம் சில சரியைகிரியைகள், சிற்சில மாயாசித்திகள், உபாசனாயோகங்கள், வருணாச்சிரம தருமங்கள் முதலாகப் பல விஷயங்களை மிக விரிவாகவும், தெளிவாகவும் கூறுகின்றன; உண்மை முத்தியை உணர்த்தும் தத்துவமசிவாக்கியப் பொருளைக் (தத்— அது. துவம்— நீ. அசி — ஆனாய் என்று இப்படியாகச் சில கூறி), குருமுகமாகவே அறியவேண்டும், எனக் கூறும்.

சீவர்கள், இந் நூல்களைப் பல சென்மங்களில் ஆராய்ந்து இவற்றில் நம்பிக்கை வைத்துப் பின்னும் பல சென்மங்களில் இவற்றிற் சொல்லியவாறு வழுவின்றி ஒழுகித் தலயாத்திரை, தீர்த்தஸ்நானம், மூர்த்திவழிபாடு முதலியவற்றால் புண்ணியம் மிகப்பெற்றுப் பின்னும் மானுடசென்மத்தை அடைந்து முத்தியடையவேண்டும் என்னும் பேராவாக்கொண்டு, அம் முத்தியின் இயல்பை இன்னதென்று அறியாது உழன்று பெருங் கவலையில் ஆழ்ந்துகிடப்பார்கள். இக் காலத்தில்தான் கைலை முதற்குரவனும், சைவபரிபாலகனுமாகிய எம்பெருமான் அத்தகைய பக்குவ சீவனுடையகர்மங்களையும், அவாவையும் நிறை தூக்கிப் பார்த்து, அச் சீவன்மீது கருணைகொண்டு, முன்னிலையில் குருவடிவாய்ப்போந்து, அங்கலிங்க ஐக்கியம் எனப்படும் தத்துவமசி வாக்கிய உண்மைப் பொருளை கிரமமாக உபதேசித்து, அதனை அடைதற்கேற்ற சாதகயோகங்களையும் உபதேசித்தருளுவான். (தத் — அது, சிவம், இலிங்கம். துவம் — நீ, சீவன், அங்கம். அசி — ஆனாய், ஐக்கியம்). இச் சாதக விதிகள் சீவர்களது சடபேதம் கர்மபேதங்களுக்கு ஏற்ப வெவ்வேறாய் அளவில்லாதனவாகும். இதுபற்றியேஓதாதுணர்ந்த ஞானசம்பந்தவள்ளல் பாண்டி நன்னாட்டில் சைவத்தை நாட்டிய காலத்துப் பின்வருந் திருப்பாசுரத்தை அருளினர்.

"ஆட்பாலவருக்கு அருளும்வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை கிளக்கவேண்டா
கேட்பாலனவும் வினையுங்குறுகாமை எந்தை
தாட்பால்வணங்கித் தலைநின்றிவை கேட்கதக்கார்"

(திருஞானசம்பந்தர் திருப்பாசுரம்.).

"அண்ணல் அருளால் அருளுந்திவ்யாகமம்....................எண்ணில் எழுபதுகோடி நூறாயிரம்" (ஆகமச்சிறப்பு 4.) என்னும் திருமந்திரமும் இப்பொருட்டேயாதல் அறிக. "நல்லன நூல் பல கற்பினுங் காண்பரிதே எல்லையிலாத சிவம்" எனவும், "நெறிபட்ட சற்குரு நேர்வழி



காட்டிற் பிறிவற் றிருக்கும் சிவம்" (குறள்) எனவும் ஒளவையார் கூறியதும் அறிக. "ஆறறியந்தணர்க் கருமறை பலபகர்ந்து" என்னும், கலித்தொகைக் கடவுள் வாழ்த்துச் சொற்றொடரும், தம்முள்ளே ஆறு அங்கங்களையும் கண்டு வேதாகமங்களையும் உணர்ந்து, (திருமந்திரம் 8-ம் தந்திரம் 3வது176) அவற்றின் அந்தத்தையும் அணவத்தக்க பக்குவமுடைய சீவர்களுக்கே, எம்பெருமான் ஏற்ற ஏற்றவாறு பல உபதேச மறைகளைக் கூறியருளுவான் என்னும் இப்பொருளை பயந்துநின்றமை கண்டுகொள்க. அளவில்லாத சீவர்களுக்கு உரிய விதிகளும் அளவுபடாமையின், இவைகள் உலகில் நூல்களாக வழங்குதல் அசாத்தியமாகும். இவ்விதிகளை அப்பக்குவ சீவர் வழுவறத் தாங்கி ஒழுகுவது மிக அரிது. அடையுங் கஷ்டங்களும் பலவாகும் "அருங்கற்பனை கற்பித்தாண்டாய் ஆள்வாரிலிமாடாவேனோ" (கோயின் மூத்ததிருப்பாதிகம்7) எனவும், "நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப, நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப" (திருப்பொற்சுண்ணம்7) எனவும் பிறவுமாகவரும் மணிவாசகர் திருவாக்குக்களையும் நோக்குக. சாதகயோகவிதிகளால் அநுட்டிக்கப்படும் புதுவினையாகிய மதிவினையால் பழவினையாகிய விதிவினையை எம்பெருமான் நீக்கியருளிய கருணையை வியந்தே, இவ்வற்புதங்களை "அற்புதப் பத்து" என்று மணிவாசகர் பாடியருளினர். "............... சிவாய நமவெனுங் குளிகையிட்டுப் பொன்னாக்குவன் கூட்டையே." (சூக்தமபஞ்சாக்கரம் 1) என்னும் திருமந்திரச் செய்யுளையும் நோக்குக. "சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயமொரு நாளுமில்லை" என்ற ஒளவையார் திருவாக்கும் மதிவினையாகிய புதுவினையால் விதிவினையாகிய பழவினையை வெல்லுதலாகிய இவ்வுண்மையையே உணர்த்தி நின்றது. இதனால் சீவன்முத்தர்க்கு மாயாபோக அநுபவமாகிய பிராரத்த அநுபவம் இல்லையாதல் கண்டுகொள்க.

சத்தும் சித்துமாகிய உடலுயிர்கள் ஒன்றோடொன்று சத்துருத்துவம் அடைந்து பிரிந்துபோகாமல், சற்குருநாதன் அருளால் அபிந்

து அநுட்டிக்கப்படும் சாதகயோகங்களால் அஞ்ஞான பௌதீக இருள் நீங்கி ஞான பௌதீகமாகிய ஒளி பெருகப்பெற்று, அவை ஒன்றோடொன்று மித்துருத்துவமடைந்து நாயக நாயகியாய்க் கூடிக்குழைந்து அள்ளூறாக்கையாகிச் சூக்குமமாய் அருளாய் சிவாங்கமாதற் கேற்ற அநுட்டானங்களைக் கூறும் வேதாகம விதிகளாகிய உபநிசத்துக்கள் உலகில் நூல்களாக எப்பாஷையிலும் வழங்குவதில்லை என்பது, 'பத்தியாலடையும் அங்கலிங்கயிக்கம், பகர்ந்திடும் உபநிடம் இன்றாம்'' (சுத்த சாதகம் 4) எனக் குமாரதேவர் கூறியவாற்றானும் அறியப்படும். உலகில் வழங்கும் நூல்களையும் உலகியல் நோக்கி உடன்படுவாராய் "......அதினால் இவையில் அடக்கமதென்பர்'' (சுத்தசாதகம் 4) எனப் பிறர் கூற்றாக அவர் கூறியதும் அறிக.

இனி, அங்கலிங்க ஐக்கியம் எனப்படும் தத்துவமசி வாக்கியப் பொருளாகிய உண்மை முத்திநிலை சுத்தசாதக முதலியவாற்றான் ஒருசிறிது கூறப்படும். "தூலம் தோன்றிய முறையே சூக்குமமாய் அருளாய் ஒடுங்கிச் சிவாங்கமாதலே உண்மை முத்திநிலையாதும்; தூலம் பழுதடைந்து பிணமாகப் பூமியில் விடப்படுமாயின், அது பிறவி நெறியேயன்றி முத்திநெறியன்று. தூல சூக்கும காரணங்கள் தம்மிற் பிரிந்து வெவ்வேறாக நிற்கமாட்டா. முத்தியடைவோர் உலகினர் காணும்படியே தூலத்தோடு மறைவார்கள்'' என்று மிகவற்புறுத்திக் கூறுகின்றது சுத்தசாதகம் என்னும் இந்நூல் என அறிக.

இவ்வுண்மைகளைச் சுத்தசாதகத்தில் 18-ம் செய்யுள் முதல் 22-ம் செய்யுள் முடிய நோக்கி அறிக. தூலம் பழுதடைந்து பிணமாக விடப்பட, உயிர் பிரிந்து முத்தியடையும் என்று குமாரதேவர் யாண்டும் கூறினாரல்லர். தத்துவப் பெரியாராகிய மெய்யடியார் எல்லாம் தமது தூலம் பிணி மூப்புக்களால் பழுதடைந்து பிணமாகாதவாறு, அதனையே சூக்குமமாக்கி நித்தியரான உண்மையை உற்று நோக்குமிடத்துக் குமார



தேவர் வேதரகசியங்களை அம்பிகை அருளால் நன்குணர்ந்து கூறியமை தெற்றெனப் புலப்படும். பின்வருந் திருவாக்குக்களும், தூலம் அள்ளூறாக்கையாய் அருளாய்க் கரைந்து சிவாங்கமாதலே உண்மை முத்தி என்பதனைப் பசுமரத்தாணிபோல் நன்கு நாட்டுதல் கண்டுகொள்க.

## திருவாசகம்.

"பொய்யாயினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே''
"கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே'' (சிவபுராணம்)

"அழிதரும் ஆக்கை ஒழியச்செய்த ஒண்பொருள்
இன்றெனக்கெளிவந்து இருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி'' என்பனமுதல்
........................................உருகுவது
உள்ளங் கொண்டு ஓர்உருச்செய் தாங்குஎனக்கு
அள்ளூறாக்கை அமைத்தனன்......................
அருளொடு பரா அமுதாக்கினன்'' (திருவண்டப்பகுதி)
என்பனவரை உற்று நோக்குக.

"......ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் .........'' (திருத்தெள்ளேணம் 18)

"......செத்தேபோனாற்சிரியாரோ'' (கோயின்மூத்ததிருப்பதிகம் 8)

"தூக்கி முன்செய்த பொய் அறத்துகள் அறுத்து எழுதருசுடர்ச்சோதி
ஆக்கி ஆண்டுதன் அடியரிற்கூட்டிய அதிசயங் கண்டாமே''

"......... செந்தீ, அருளும்மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய அதிசயங்
கண்டாமே.'' (அதிசயப்பத்து 8, 10)

" செடிசேருடலைச்சிதையாததுஎத்துக்குஎங்கள்சிவலோகா" (குழை
" என்புள்ளுருக்கி..............." (குலாப்பத்து 3) [தபத்து 2)
" கொம்பி லரும்பாய்க் ..............." (குலாப்பத்து 6]
" ஊசலாட்டும் இவ்வுடல் உயிராயின இருவினை அறுத்துஎன்னை
ஓசையால்உணர்வார்க்கு உணர்வுஅரியவன் உணர்வுதந்து ஒளியாக்கி
பாசமானவைபற்றறுத்து உயர்ந்ததன் பரம்பெரும் கருணையால்
ஆசைதீர்த்துஅடியார்அடிக்கூட்டியஅற்புதம்அறியேனே "
(அற்புதப்பத்து 8)

" செடிசேருடலைச்செலநீக்கிச்சிவலோகத்தேநமைவைப்பான் "
" உடையான் அடிக்கீழ் பெருஞ்சாத்தோடு உடன்போவதற்கே ஒருப்படுமின் (யாத்திரைப்பத்து 4, 5)

## திருநாவுக்கரசு நாயனார்.

" ஒளியான நெய்த்தானனைத் தொண்டராய்த் தொழுவார் சுடர்
வாணரே " (திருநெய்த்தானம் — திருக்குறுந்தொகை 4)

## சுந்தரமூர்த்தி நாயனார்.

" ஊன்உயிர்வேறு செய்தான் நொடித்தான் மலைஉத்தமனே "
(திருநொடித்தான்மலை)

## திருமூலர் திருமந்திரம்.

" அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற்கு மிழியைக் காணில்
எழுகின்ற தீயில் கற்பூரத்தை ஒக்கப்
பொழுகின்ற இவ்வுடல் போம் அப்பரத்தே " (விசுவக்கிராசம் 1)



## திருவாய்மொழி (நம்மாழ்வார்)

" களிப்புக்கவர்வும் அற்றுப் பிறப்புப்பிணிமூப் பிறப்புமற்று
ஒளிக்கொண்ட சோதியமாய் உடன்கூடுவது என்றுகொலோ "
(2-ம் பத்து 3-ம் திருமொழி 10)

" குழுமித்தேவர் குழாங்கள் கைதொழச்சோதி வெள்ளத்தினுள்ளே
எழுவது ஓர் உரு என் நெஞ்சுள் எழும் ஆர்க்கும் அறிவரிதே "
(5-ம் பத்து எங்ஙனேயோ 10)

## முத்துத்தாண்டவர்.

" மாணிக்கவாசகர் பேறெனக்குத் தரவல்லாயோ அறியேன்........... .........கட்டையில் வைத்துச் சுட்டுவிடாதே, கள்ளக்குழியில் புதைத்துவிடாதே ............ பொற்பூமாரி இமையோர் சொரிந்திடப் பொன்னூசல் ஆடும் திருவாதிரைநாளில், கற்பூரதீபம்போல் என்தன் உடலைக் கனகசபையிற் கலந்துகொள்வாயே "

## ஔவை குறள்.

" ஐம்பதும்ஒன்றும்அழல்போலத்தான்நோக்கில்உம்பர்ஒளியாய்விடும் "
" எல்லையில் இன்அமுதம் உண்டுஆங்கு இனிது இருக்கில்
தொல்லைமுதல்ஒளியே ஆம் " (வீட்டுநெறிப்பால்)

## அருணகிரிநாதர் கந்தரனுபூதி.

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோக சிகா மணியே. (11)

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனர் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே. (41)

கந்தரலங்காரம்.

சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் துளைத்தவைவேல்
மன்ன சடம்பின் மலர்மாலை மார்பமௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே (19)

நம் தாயுமானப் பெருந்தகையும் இவ் வுண்மை நிலையையே அடையமுயன்று தவறினமையால் ஆற்றாமைபற்றிச் சடம் பொய் என்று ஒருகால் கூறினர் ஆயினும், தூலம் பிணமாகவிழ உயிர் முத்தி அடையும் எனக் கூறுவாரை மறுத்து "உலகநெறிபோல் சடலம் ஓய உயிர் முத்தி இலகும் எனல் பந்த இயல்பே பராபரமே" எனவும், "தேகம் யாதேனும் ஒரு சித்திபெறச் சீவன்முத்தி ஆகு நெறி நல்ல நெறி ஐயா பராபரமே" (பராபரக் கண்ணி 358, 357) எனவும் கூறியவைகளால், தேகம் அமலம்பெற்று மறைதலே உண்மை முத்தி எனக் கருதினராதல் நன்குபெறப்படும். இன்னும், வேதசாரமாகிய திருவாசகத்தையும், திருக்கோவையையும் நடராசர் சந்நிதானத்துக் கண்டு எடுத்து ஓதி, அவற்றின் பொருளை அறியமுடியாது, அவை தாம் அறியாததோர் நூதனப் பொருள் உடையனவாய் இருந்தமை கண்ட வேதாகம பண்டிதர்களாகிய தில்லைவாழந்தணமூர்த்திகள், "எம்பெருமான் எழுதிய இம் மறையின் பொருள் யாது" என மணிவாசகரை வினவியவிடத்து, அப்பெருமான் அதனைக் காட்டுதும் என நடராசப்பெருமானைச் சுட்டிக்காட்டி, அவர் சந்நிதியில் பலருங் கண்டு போற்றும்படி



தூலத்தோடு மறைந்தருளினமையாலும், அங்ஙனம் தூலத்தோடு மறைந்து சிவாங்கமாதலாகிய உண்மை முத்தியே அத் திருவாசக திருக்கோவைகள் முதலிய பொருளாம் என வெள்ளிடை மலைபோல் விளக்கிக் காட்டினமை அறிக. சத்தும் சித்துமாகிய உடலுயிர்கள் அன்னுருக்கையாகி நாயக நாயகியாய்க் கூடிக் குழைதற்கண் உளதாகும் பேரின்பமே உலகநிலைபோல் முன்னிலைக்கண் வைத்து ஓதப்பட்ட திருக்கோவையிற் கூறப்படுதலால், அஃதும் தூலம் சூக்குமமாய் அருளாய்க் கரைந்து சிவாங்கமாதல் எனப்படும் இவ்வுண்மை முத்தி நிலையையே முதலியதாதல் தெற்றென உணர்க.

இன்னும் நந்தனாரும், சேந்தனாரும், முத்துத்தாண்டவப் பெருமானும் பல்லோரும் கண்டு போற்றுமாறு நடராச சந்நிதானத்தில் மறைந்தமையும், ஆழ்வாருள்ளும் ஆண்டாளம்மை என்னும் மாதரார் திருவரங்கர் சந்நிதானத்துப் பல்லோருங் கண்டு போற்ற மறைந்தமையும், பிறர் பலரும் அவ்வாறே மறைந்தமையும் அறிக. ஞானசம்பந்தப் பெருமானும், அவர் திருமணங் காணச் சென்ற சீவன்முத்தர்களும் பெருஞ்சோதியில் ஒருங்கு மறைந்தமையும் அறிக. அறுபான்மும்மை நாயன்மாருள் ஏனையோரும் இவ்வாறு மறைந்தமையே உண்மையாதல் உய்த்துணர்ந்துகொள்க.

இவற்றால், தத்துவப் பெரியார் முத்தியடையுங் காலத்து, உலகம் உய்யுமாறு திருவருட்செயலாகவே பலரும் கண்டு போற்றும்படி இப் பெரும்பேறு நிகழப்பெறும் என்பதும் தெற்றெனப் புலப்படுதல் காண்க. "அருளாய் வெளியதாய் உலகு கண்டிடவே" எனச் சத்தசாதகம் 19-ம் செய்யுள் கூறியதும் அறிக.

வேதரகசியம் இவ்வாறு இருக்க, அதனையும் உணராது, சமயாசாரியர் முதலிய தத்துவப்பெரியார் அருமைபெருமையும் உணராது, தூலத்தோடு மறைதலே இயற்கைமுறை என்பதும் அறியாது, தூலத்

தோடு மறைதல் ஒருவகைச் சித்தியும், பதமுத்தியும், கற்பிதநிலையுமாம் எனத் துணிந்து கூறுவார் அறியாமைக்கு இரங்குவதேயன்றி வேறு செயற்பாலது யாதும் இல்லை என அறிக. தூலத்தோடு மறைதலில் சில வேறுபாடு காணப்படினும் அவையெல்லாம் மீண்டுவாரா நெறியே என்பதில் ஐயம் இல்லை என உணர்க. தத்துவப் பெரியார் சித்திகள் எல்லாம் திருவருட்செயலாக நடைபெறும் அருட்சித்திகளே யன்றித் திரோதானத்து நின்று முனைப்போடு உஞற்றும் மருட்சித்திகளாகா என்பதும் அறிக. சமயாசாரியர் முதலியோர் தூலத்தோடு மறைந்தமையே மீண்டு வாரா உண்மை நெறியாம் என்பதும் உடம்பைப் புவியில் விட்டு ஏகும் நெறியெல்லாம் பிறவிநெறியேயாம் என்பதும் நன்கு கடைப்பிடிக்க.

இனி நம்மவர் பலர் தூலம் பழுதடைய அதனைப் பிணமாகப் பூமியில் விடுத்து, உயிர் பிரிந்து அடைவதும், தூலத்தோடு மறைதலும் ஆகிய இரண்டு நெறியும் முத்தியே எனவும், இவை பிராரத்தின்படியாகும் எனவும் கூறி அமைவர். சிலர் "வினைப் போகமே ஒரு தேகங் கண்டாய், வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது" என்ற பட்டினத்தார் பாட்டுங் கூறிப் பிராரத்த ஒழிவில் உடம்பு அழிந்தேவிடும் என்பர். பிராரத்த அநுபவம் மருளுடம்பினராகிய சீவர்களுக்கே உரியது என்பதனையும், பிராரத்த ஒழிவின் கண்ணேயே மருளுடம்பாகிய மாயா தநு, பிரணவ உடம்பாகமாறிச் சீவன் முத்திநிலை கைவரும் என்பதனையும், பட்டினத்தார் கூறிய "வினைப்போக" தேகம் மருளுடம்பே என்பதனையும் மருளுடம்பினர் சீவன் முத்தராகார் என்பதனையும் சுத்தசாதகத்தில் "பிராரத்தம் உடன்பாடு என்று எந்த நெறியும் பேசிடும்" என்னும் 24-ம் செய்யுளாலும், "அன்னை தன் முலைப்பால்" என்னும் 25-ம் செய்யுளாலும் கண்டு, அவர் தெளிவுபெறுவாராக. இதுகாறும் கூறியவற்றின் சாரமாக இன்னும் ஒரு சில கூறி இவ் விஷயம் முடிக்கப்படும்.



பொய்த்தல் என்றும் பொலியாது, மெய் என்றும் வாழ இடந் தரும். சீவதசையில் பொய்யாக்கப்படும் இச் சடத்துக்கு மெய் என்று ஒரு திருநாமம் பிரசித்தியாக வழங்குகின்றது. இது பொய்யென்றே முடிபுபெறவில்லை. "உடலுயிர் உண்மை என்று ஓர்ந்து கொள்ளாதார் கடலில் அகப்பட்ட கட்டை யொத்தாரே" (சிவவேடம் 2)

"உயிரும் உடலும் ஒருங்கிக் கிடக்கும்
பயிருங் கிடந்துள்ளப் பாங்கறியாரே" (கூடாவொழுக்கம் 12)

"நான்றவிழ் முட்டை யிரண்டையுங் கட்டியிட்டு
ஊன்றியிருக்க உடல் அழியாதே" (சரீரசித்தியுபாயம் 5)

எனவும் பிறவுமாக வரும் திருமூலர் திருவாக்குக்கள் பலவற்றாலும் உடலும் உயிரும் அழியாமையும், அவை பிரியாமல் பிரிந்து ஒன்றாய் நிற்பதும் நன்கு பெறப்படும். நமது தேகமாகிய பூமியுள்ளே குண்டலி சேடசயனனாக விளங்கும் அனந்த சயனனாகிய நாராயணன் சிவமே யன்றி வேறு யார்? அமிர்தசுகவாரி எனவும் ஞானசத்தி எனவும் கூறப்படும் விஷ்ணுவாகிய நாரி அரனது அர்த்தபாகத்தை உண்டனள். அர்த்தபாகம் பெற்ற இடத்தே நமது சாதல் அழிவுபெறும். இருவினையும் சமப்பட்ட இடத்தே சீவன் சதாசிவமாய்ச் சிவமாகும் என அறிக. ஒவ்வோர் சமயத்தைத் தழுவினவர்கள், "எச்சமயத்தும் இயற்கையை விட்டிடலாகா............" (சுத்தசாதகம் 83) என்றவாறு, அவ்வச் சமயங்களாற் பிரதிபாதிக்கப்படும் வடிவங்களையே பெரிதாகப் புகழ்ந்து கூறுவர். ஆயினும், முடிவில் யாவற்றையும் ஒன்றாகக்கண்டு கூறினமையும் அவ்வவர் பாடல்களால் நன்கு புலப்படும். "அரியலாற்றேவியில்லை ஐயன் ஐயனார்க்கே" (திருவையாறு, திருநேரிசை 5) எனவரும் அப்பர் திருவாக்கையும் நோக்குக. இதனால் சிவமே சத்தி, சத்தியே சிவம்; அந்தமே ஆதி, ஆதியே அந்தம்; ஆதியில்லாமல் அந்தமில்லை, அந்தமில்லாமல் ஆதியில்லை; சத்தில்லாமல் சித்தில்லை, சித்தில்லாமல் சத்தில்லை;

சத்தியில்லாமல் சிவமில்லை, சிவமில்லாமல் சத்தியில்லை; விஷ்ணு இல்லாமல் சிவமில்லை, சிவமில்லாமல் விஷ்ணு இல்லை; மெய்யில்லாமல் உயிரில்லை, உயிரில்லாமல் மெய்யில்லை என்னும் உண்மை பெறப்படுதலும் காண்க. பொய், மெய்யிலாவிடத்துச் சத்தம் பொலியுமா? பொலியாது; பேச இடந்தராது; அசைவற்ற பிணமாகும். பொய்யும் மெய்யும் சமம்பெற்ற நாள் (இருவினையுங் கெட்டு) இவ் விரண்டும் கெட்டு வேறு உருவப்பெறும். அது சுண்ணம்பும் மஞ்சளும் கூடிக் குழைதலால், அவ் விரண்டின் நிறமும் கெட்டுப் பிறிதொன்று முளைத்ததுபோலாகும். “...உடல் உயிராகிய இருவினை அறுத்து என்னை ......ஒளியாக்கி” எனவும் (அற்புதப்பத்து 8) “ஊன் உயிர் வேறு செய்தான்” (சுந்தரர்) எனவும் வரும் திருவாக்குக்களையும் நோக்குக. ஆதலால், இரண்டு இல்லாமல் விளைந்தது ஒன்றில்லை. இரண்டும் கூடும் நிறையால், நிறைக்கு ஏற்ப ஏற்றம் இறக்கம் விளங்கி, முன்னிலை தன்னிலைகள் வேறுவேறாய்ச் சுட்டுணர்வுக்கு இடமாயிற்று. இரண்டும் சமமாக நிறையோடு தழுவி நிகழும் நாள் துவிதம் அற்று அத்துவிதமாகும், ஒன்றாய் நின்றிடும் என்பது முடிவாகும். “ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும் போய் நான் கெட்டவா” (திருத்தெள்ளேணம் 18). “ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்.” (அப்பர் தேவாரம், திருப்புகலூர் திருத்தாண்டகம்) “ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தக்கால், அன்பதில் ஒன்றாம் அரன்” (ஔவை குறள், வீட்டு நெறிப்பால்) எனவருந் திருவாக்குகளாலும் இவ் வுண்மையை உணர்ந்துகொள்க.

ஆதலால், தூலம் சூக்குமமாய் அருளாய்மாறிச் சிவாங்கமாதலே தத்துவமசி மஹா வாக்கியப் பொருளாகிய உண்மை முத்தியாம் என்பதும், இதுவே சுத்தசாதகமும், திருவாசகமுதலிய தத்துவப் பெரியார் பாடல்களும் நுதலிய பொருளாம் என்பதும் நன்கு கடைப்பிடிக்க. மேலும் விரிப்பிற் பெருகும்.



இவ் வுண்மை முத்திநிலையைச் சாத்திர நிபுணர்கள் தாம் இயற்றிய நூல்களில் ஒரு சிறிதும் கூறவில்லையே எனப் பலர் கருதுகிறார்கள். அங்ஙனம் கருதுவது அறிஞர்க்கு அழகன்று. அந் நிபுணர்கள் இவ் வுண்மைகளைச் சூத்திரங்களிலும் செய்யுட்களிலும் புகட்டாமல் புகட்டி மறை பொருளாக்கிவிட்டார்கள் என்பதே உசிதமாகும். இவ் வித்துவப் பெரியார்கள் தத்துவப் பெரியார் திருவாக்குக்களின் பொருளை அறிந்திலரோ எனின், ஒருவாறு அறிந்தும், சிஷ்யர்கள் பக்குவம் நோக்கிச் சமயோசிதமாகப் பொருள் கூறினார் என்பதே உசிதமாகும். என்னை! இக்காலத்தும் அத்தகைய குருபீடங்களைச் சேர்ந்த குரவர் சிலர், தத்துவப் பெரியார் பாடல்களுக்குச் சபையார் குறிப்பறிந்து சமயோசிதமாகப் பொருள் கூறிவிடுதலும் மாபாதலின் என்க. ஆகா! நன்று கூறினாய்! குமாரதேவரும் இத்தகைய குருபீடங்களுள் ஒன்றைச் சேர்ந்தவர்தாமே! அவர் இவ் வுண்மைகளை எவ்வாறு அறிந்து கூறினார் என்பார் உளர் ஆயின் அவர், அக் குமாரதேவர் தமது வித்தியா சாமர்த்தியத்தாலும் தற்போதத்தாலும் சுத்தசாதகம் என்னும் இந் நூலைக் கூறினால்லர் எனவும், பெரியநாயகியே அவர் வாக்கில் நின்று இந் நூலைக் கூறியருளினள் எனவும் உண்மையை நோக்கி அமைவார் என்பது திண்ணம். குமாரதேவர் அப்பிறப்பில் முத்தியடைந்தவரா? இல்லை இல்லை. “இந்த நெறிசொலுமருத்தம் நினைக்கும் வாய்த்திடும்” (சுத்தசாதகம் 93-ம் செய்யுள்) என அம்பிகை அவருக்குக் கூறியருளியதாகச் சொல்லப்பட்டதேயன்றி, அவர் முத்தியடைந்தமைக்கு வேறு சான்றுகள் இல்லை.

வேதம் முதலாக உலகில் வழங்கும் நூல்கள் இவ் வுண்மை முத்திநிலை மறைபொருளாகவே நிற்குமாறு, ஒரு சில கூறிப்போதாவும், இன்னும் பலர் தத்துவமசியைப்பற்றி முற்றும் உணர்ந்தவர்போலவும், வாலியம் வாலியமாக எழுதிப் பிரகடனஞ்செய்து போதாவும், உண்மையை உணர்ந்து தத்துவமசியேயான பெரியார் இவ் வுண்மைகளை எல்லாம்

கௌணபதங்கள் அமைந்த செய்யுட்களால் தேவாரம் திருவாசகம் முதலியனவாகப் பாடிவிட்டு மறைந்தனர். உண்மை உணர்ந்து அது ஆனோர் அது ஆவர். பின் அதுவே அதன் பொருளைச் சொல்லும். இதனால் இப் பெரியார் வாக்கும் சிவவாக்கே ஆதல் அறிக. அவர் கௌணபதங்களால் கூறியமையும், சீவர்கள் பக்குவம் நோக்கிய காருண்ணிய மிகுதியேயாம் என அறிக. "ஓங்காரத்துட்பொருளை ஐயன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே" எனவும், பிறவுமாக மணிவாசக வள்ளல் கூறியாங்கு, ஓங்காரத்துட் பொருளையும் அதனை அடைதற்கேற்ற சாதக யோகங்களையும் திருப்பெருந்துறைகுருநாதனால் உபதேசிக்கப்பட்ட அப் பெருமான், அவற்றையே தாரகமாகக் கொண்டு சாதக யோகங்களாற் படியேற்றம்பெற்றுழி, முறையான் எய்திய சிவாநுபவக் காட்சிகளே திருவாசகமாக அருளப்பட்டன ஆகலின், அதன்பொருள் எல்லாம் அத்தகைய அநுபவம் வாய்ந்த மெய்யடியாராகிய அந்தணர்க்கேயன்றிச் சாதலடையும் வல்லபம்பெற்ற எம்போலிய சூத்திரர்க்குப் புலப்படுதல் அசாத்தியம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? திருவாசகம் எம்பெருமான் வடிவமாகிய நித்திய வேதாகம சாரமே என்பது "கற்போலு நெஞ்சங் கசிந்துருகக் கருணையினால், நிற்பானைப்போல என் நெஞ்சினுள்ளே புகுந்தருளி, நற்பாற்படுத்து என்னை நாடறியத் தான் இங்ஙன், சொற்பாலது ஆனவாதோணோக்கமாடாமோ" (திருத்தோணோக்கம் 4) என மணிவாசகர் கூறியருளியதால் அறியப்படும். நித்திய வேதாகமங்களாகிய எழுதாமறைகளை அறிதற்கு நமது தூலம் அமலம் அடைதலாகிய பக்குவம் பெறவேண்டும். வேதாகமங்களையும், அங்கங்களையும் அநுபவத்தில் உணர்ந்த தத்துவப் பெரியார் அவற்றைத் தமது தேவாரம் திருவாசக முதலிய பாடல்களில் குறித்தருளினர். "பாடி எழுகின்ற வேதாகமங்களும் நாடியினுள்ளாக நான் கண்டவாறே" (திருமந்திரம் 8-ம் தந்திரம் — நின்மலாவத்தை 14) எனத் திருமூலர் கூறியதாலும் நித்திய வேதாகமங்களை உணர்ந்துகொள்க. மணிவாசகர் காலத்தில் இருந்த வேதாகம பண்டிதர்களாகிய தில்லைவா



ழந்தணரே வேதசாரமாகிய அத்திருவாசகப் பொருளை அறியாது மயங்கினர் என்றால், பிற்காலத்தவர் பலர் அதனை அறியாது, மனோ தர்மத்தாற் பல கொள்கைகளை நாட்டிவிட்டமை வியப்பன்றே! "மார்கழி நீராடல்" "திருப்பொற் சுண்ணம்" "திருப்பூவல்லி" முதலியன எல்லாம் ஒவ்வோர் சிவாநுபவக் காட்சிகளைக் குறிக்கும் பரிபாஷைகள் என்றே பெரியோர் கூறுவர். "மார்கழி எற்ற மதாமே" (தியானம் 17) எனத் திருமூலரும் கூறினர்.

திருவாசகத்தையும் அதனை அருளிய குருநாதனையும் பூசித்தற்கு நாம் ஒருகால் அதிகாரிகளாயினும், அதனை ஓதிப் பயனடைதற்கு அதிகாரிகள் ஆதல் அசாத்தியமேயாகும். "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோரும் ஏத்தப்பணிந்து" (சிவபுராணம்) என்பதனாலும் திருவாசகப் பொருளுணர்ந்தார் தூலத்தோடு மறைந்து உண்மை முத்தியடைதல் திருவருளாணையாதலும் தெற்றென உணர்க. (சிவபுரம், கைலை என்பன, முத்தியைக் குறிக்கும் கௌணபதங்களாகும்.) "மதாவாசகம் ஓதன் முத்தி உறுபயன்." எனவும், "தானே முத்தி தருகுவன் சிவன் அவன், அடியன் வாதவூரனைக் கடிவின் மனத்தாற் கட்ட வல்லார்க்கே" (நால்வர் நான்மணி மாலை) எனவும் வருவனவற்றாலும் திருவாசகப்பெருமையும், உண்மை முத்தி அடைந்தோரை வழிபடுதல் சிவவழிபாடே ஆதலும் தெற்றென உணர்க. அறுபான் மும்மை நாயன்மார் போலவே சேந்தனாரும், மூத்துத்தாண்டவப்பெருமானும் வழிபடப்படுதல் அவசியமேயாகும். இறந்தோரை வழிபடுதல் அவ வழிபாடேயாதலின், முத்தியடைந்த தத்துவப் பெரியாரே வழிபடற்பாலர் என அறிக.

சமயத்தால் அடையும் பெரும்பேறாகிய உண்மை முத்தி நிலையைக் குறித்து இயன்றவரை ஆராய்ந்து எழுதப்பட்ட இக் கட்டுரையைச் சைவாபிமானிகளாகிய தமிழ் அறிஞர்கள், தங்கள் அகத்திற் குடி

கொண்டிருக்கும் சந்தானகுரவர் முதலிய நாமரூபங்களைப்பற்றிய அபிமானத்தால் புறக்கணித்துவிடுவது நீதியாகாது. உமாபதி சிவாசாரியார், பெற்றான் சாம்பனுக்கும் முள்ளிச் செடிக்கும், முத்தி கொடுத்துத் தாமும் சரீரத்தைவிட்டு முத்தியடையவில்லையா? எனப் பலர் ஐயம் அடைகின்றனர். பெற்றான் சாம்பானும் முள்ளிச்செடியும் அருட்சோதிவடிவாய் முத்திபெற்றது உண்மையே. இத்தகைய உண்மை முத்தி, பலர் காண நிகழவேண்டியதே திருவருள் நியமமாதலாலும், எம்பெருமானால் ஆவேசிக்கப்பட்டு நிற்றற்கு உமாபதி சிவம் மிக்க புண்ணியமுடையராய் இருந்தமையாலும், அவ்வுமாபதி சிவாசாரியர் முன்னிலையில், இம்முத்தி நிகழவேண்டியதாயிற்று என்பதே உண்மையாகும். எம்பெருமான் ஆவேசித்து நிற்றற்குரிய அவ்வளவு புண்ணியம் உமாபதி சிவத்துக்கு இருந்ததேயன்றி, அவர் அப்பிறப்பில் இம்முத்தியை அடைதற்கும், இதற்குரிய சாதக யோகங்களைத் தெரிந்து அநுட்டித்தற்கும் பக்குவமுடையராயினாரல்லர். இவற்றை அறிந்தாராயின், தாம் இயற்றிய நூல்கள் ஒன்றிலாவது இவற்றைக் குறித்திருப்பாரன்றோ! "முத்தி கொடுக்க முறை" என்ற பாசுரத்தாலும், அதனை அடையப் பெற்றோர் சோதியாய் மாறியதாலும், தூலத்தோடு மறைதலே முத்தி என்பது நன்கு பெறப்படவில்லையா? ஆண்டு நிகழ்ந்தனவெல்லாம் ஆவேசமாய் எம்பெருமானால் நிகழ்ந்தனவேயன்றி, உமாபதி சிவாசாரியரால் நிகழ்ந்தனவல்ல. ஆவேசிக்கப்பட்டு நின்ற அவ்வளவிற்கே உமாபதி சிவம் புண்ணிய சீலர் ஆதலால், அதற்கேற்றவாறு அவரைக் கௌரவப்படுத்திப் போற்றுவதே முறையாகுமன்றி, அவருக்கு முற்றாக அமையப்பெறாத தன்மையை வருவித்து அமைத்து அவரைக் கௌரவப்படுத்தத் துணிதல் மதியின்மையோர் செயலேயன்றி மதியுடையோர் செயலன்று. "ஆட்பாலவருக்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும்,



கேட்பான் புகில் அளவில்லை கிளக்கவேண்டா" என்றவாறு, எம்பெருமான் பெற்றானுக்கும் முள்ளிச் செடிக்கும் முத்திகொடுத்தற்கு உமாபதி சிவாசாரியர் சரீரம், அவர் புண்ணியத்தால் ஒரு சாட்டாக இருந்ததேயன்றி, அச்சரீரம் அப்பிறப்பில் முத்தியடைதற்கேற்றவாறு சாதக யோகங்களால் அமலம் அடையப் பெற்றதன்று. இச்சம்பவத்தை ஒரு போலிச் சாட்டாகக்கொண்டு புறச்சமயத்தாரும் வியப்படையுமாறு இயற்கை முறையாக அமைந்துள்ள நமது சைவசமய உண்மை முத்தி நிலையை மறுக்கத் துணிதல் அறிவுடையோர்க்கு அழகன்று.

பிறவி வலைப்படுகின்ற சீவர்களுக்குரிய அஞ்ஞான பௌதிக தநுவாகிய மருளுடம்பே பிணமாகப் பூமியில் விடப்படுவதாகும். சீவன் முத்தர்க்குரிய பிரணவ உடலம் அருளாய்க் கரைந்து அருவமாகும். ஆதலால், பிணமாக வீழ்ந்த மருளுடம்புகளை அருள்வடிவமாகக் கொள்ளுதல் இயற்கை விரோதமாம் என அறிக. மருளுக்கும் அருளுக்கும் இடையீடு மிகப்பெரிதாம் என்பது சுத்தசாதகத்தில் கண்டு தெளிக. ஆதலால் பிராரத்த அநுபவத்தால் சாதலடைந்த மருளுடம்பினராகிய உமாபதி சிவாசாரியரையும் மற்றைய சந்தான குரவர் முதலிய வித்துவப் பெரியாரையும் பலவகையாற் புண்ணியசீலர் என்பதேயன்றி, அருளுடம்பினராய் முத்தியடைந்தார் எனக் கொள்ளுதல் இயற்கை விரோதமும் பாதகமுமாம் என அறிக.

இதுகாறும் கூறியவைகளால் தூலத்தோடு மறைதலே உண்மை முத்தி என்பதும், அதுவே சுத்தசாதகமும், தத்துவப் பெரியார் பாடல்களாகிய திருவாசக முதலியனவும் நுதலிய பொருளாம் என்பதும், தூலம் பழுதடைந்து பிணமாக விழ இறத்தல், பிறவி நெறியே என்ப

தும் ஒருவாறு விளக்கப்பட்டன. இன்னும் இவ் வுண்மைகள் எல்லாம் சுத்தசாதகத்தில் நன்கு விளக்கப்பட்டிருத்தலின், அந் நூலில் கண்டு தெளிக. சுத்தசாதகப் பொருளை நன்குணர்ந்தவர் தத்துவப் பெரியார் பாடல்களில் மறை பொருள்களையும் ஒருவாற்றான் அறிந்து கொள்ளுதற்கு அருகராவர்.

சுபம்.

சைவம் தழைக.




## வித்தகச் சமய வெளியீடு

ஒவ்வொருவருடைய கொள்கைகட்குந் தாயகமாய் விளங்குவது வித்தகச்சமயம். சைவம், வைணவம், புத்தம், கிறிஸ்துவம், மகமதியம் யென்னும் மதங்களையும், இன்னும் புதியனவாக ஆக்கமுற உளவேல் அவைகளையும் தன்னகத் தடக்கி அவைகளைத் திற்கும் தலையாய் விளங்குவது வித்தகச்சமயம். காரியப்பட்ட இவ்வுலக இன்பங்களாலன்றி வினைய உபாயங்களால் நித்தியானந்த சுகப்பேறு அடைவதென்பது முயற்கொம்பென விளக்கிக்காட்டுவது வித்தகச்சமயம். இவ்வுண்மைகள் மாதமொருமுறை வெளியிடப்படுமாதலால், இதனை அறிந்து, ஒழுகி, உய்ய விரும்புவோர் புதுவை நந்தி வெளியீட்டு மன்றம் (நந்தி பப்ளிஷிங் ஹௌஸ்) சொந்தக்காரராகிய:- ரா. நாகரத்தினம்பிள்ளை அவர்கள் விலாசத்துக்கு தங்கள் தங்கள் முழுவிலாசத்தை தெரிவிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

## திருவாசக உண்மை.

கடவுள் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதி அகில சீவர்கள் உய்யும் பொருட்டு உதவியருளியதும், மாணிக்கவாசகர் அருளிச் செய்ததுமாகிய தெய்வத் தமிழ் வேதமாகிய திருவாசகத்தின் உள்ளிட்ட கருத்துக்களை நன்கு விளக்கி வசன நடையில் எழுதப்பட்டது.

விலை அணா எட்டு.

உ

சிவமயம்.

# திருமந்திரப் பதிப்பு.

கிறிஸ்து மதத்தவர், தமது வேதம் என்னும் பைபிளைப் (Bible) பல்லாயிரக் கணக்காக அச்சிட்டுக் குறைந்த விலைக்குக் கொடுத்து அதனை எங்கும் பரவச்செய்கின்றனர். சைவ சமயிகள், தங்கள் வேதாகமங்கள் அமைந்த நூல்களை அச்சிட்டு குறைந்த விலைக்குக் கொடாமையினால், சைவசமய உண்மைகள் ஏழைமக்கள் வசிக்கும் இடங்களில் பரவாமல் இருக்கின்றன. இவ்வுண்மையை யுணர்ந்த பல அன்பர் வேண்டுகோட்கு இணங்கி ஸ்ரீ திருமூலர் அருளிச்செய்த திருமந்திரம் ௩௦௦௦ த்தை சுத்தமான பதிப்பாக நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிட்டு ரூபா ஒன்றுக்கு 2 பிரதி வீதமாக, இலாபங் கருதாது கொடுக்க நிச்சயித்திருக்கின்றோம். 10,000 பிரதிகள் அச்சிடுவதற்கு 5000 ரூபாவரை வேண்டியதாகின்றது. சைவாபிமானமுள்ள 500 அன்பர்கள் தலைக்கு பத்து ரூபா அனுப்பிவைப்பார்களானால், முற்கூறிய தொகை அச்சிட்டு முடிக்கப்படும். 10 ரூபா அனுப்பினவர்களுக்கு 20 புத்தகம் அனுப்பப்படும். இப் புண்ணியச் செயலுக்குச் சமயாபிமானமுள்ள செல்வர் எவரேனும் ஒரு தொகைப் பணம் நன்கொடையாக அளிப்பாராயின், அது, மிக்க நன்றியறிதலோடு ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர் பெயரும் புத்தகத்தில் வெளியிடப்படும்.

திருமந்திரத்தை மேலே கூறியவாறு அச்சிட்டு வெளிப்படுத்த நிச்சயித்திருப்பதால் முன் பணம் செலுத்துவோர்கள், புதுவை நந்தி வெளியீட்டு மன்றம் (நந்தி பப்ளிஷிங் ஹௌஸ்) சொந்தக்காரராகிய:— ரா. நாகரத்தினம் பிள்ளை அவர்கள் விலாசத்துக்குப் பணமும் அனுப்பித் தங்கள் தங்கள் முழுவிலாசத்தை தெரிவிக்கும்படியும், அதனோடு தங்கள் தங்கள் நண்பர்களை இப் புண்ணியச் செயலுக்கு உதவிபுரியுமாறு தூண்டி முற்பணம் அனுப்புவித்து இச் சிவப்பணியில் ஈடுபடுத்துமாறு செய்விக்கவும் வேண்டப்படுகின்றனர்.